# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 09 செவ்வாய்க்கிழமை (25.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 29


# மட்டக்களப்பில் உள்ளூராட்சித் தேர்தல்

# அடுத்த மாதம் வேட்பு மனுத் தாக்கல்

## அரசு திடீரென வர்த்தமானி அறிவிப்பு

கொழும்பு, டிசெம்பர்.25

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு காரணங்களுக்காக இதுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தலை அடுத்தவருட முற்பகுதியில் நடத்த அரசு தீர்மானித்துள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபை உட்பட 9 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்த அரசு முடிவுசெய்துள்ளது. அதற்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை ஏற்கப்படும் என உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

வேட்புமனுத் தாக்கல் முடிவுற்றதும், ஐந்து அல்லது ஏழு வாரங்களுக்குள் - பெரும்பாலும் அடுத்த பெப்ரவரி மாதம் - தேர்தல் நடத்தப்படும் என்று உள்ளூராட்சி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மொத்தம் 12 உள்ளூராட்சி சபைகளில் 3 சபைகளுக்கான தேர்தல் ஏற்கனவே இடம்பெற்றுவிட்டது. ஏனைய சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மட்டு. மாவட்டத்தில் தொடரும் பதற்ற நிலையைச் சுட்டிக்காட்டி சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்க வலியுறுத்தி வந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் வெள்ளத்தினால் இரண்டு லட்சம் மக்கள் பாதிப்பு

மட்டக்களப்பு,டிசெ.25

கிழக்கு மாகாணத்தில் தொடரும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் சுமார் 58 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களில் 10,300 குடும்பங்களைச் சேர்ந்த 41,250 பேர் பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்திலும் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற அடைமழை காரணமாக மக்கள் பெரும் பாதிப்புக்கு இலக்காகி உள்ளனர்.

திருகோணமலைக்கும் மூதூருக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வவுனியா செல்லும் நோயாளர்களுக்குச் சிரமம்

### மாற்று ஏற்பாடு கோருகிறார் கிளிநொச்சி வைத்தியசாலை அதிகாரி

கிளிநொச்சி,டிசெ.25

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து வவுனியா வைத்தியசாலைக்கு நோயாளர்கள் செல்வதற்கு வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையே தனியான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி கோரிக்கை விடுத்திருக்கிறார்.

கடந்த மாதம் தொடக்கம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள வன்னிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானங்களைக் கண்காணிப்பதற்காக இத்தாலியிடமிருந்து இந்தியா 'ராடர்' கொள்வனவு

புதுடில்லி,டிசெ.25

விடுதலைப் புலிகளின் விமானங்களைக் கண்காணிக்கும் வகையில் இத்தாலியிடம் இருந்து நவீன 'ராடர்'களை கொள்வனவு செய்வதற்கு இந்திய விமானப் படை முடிவு செய்துள்ளது.

இந்தியாவில் புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க கடற்படையும் கடலோரப் படையும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன.

அதேபோன்று வான்வழிப் பாதுகாப்பை கண்காணிக்கவும் முடிவாகியுள்ளது. அதற்கு இணங்க புதிய ராடர்கள் பொருத்தப்படும் என்று விமானப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வான் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஒன்றான இத்தாலியில் உள்ள ராடர் நிறுவனமான 'பின் மெகானியா எஸ்.பி.ஏ.' என்ற நிறுவனத்திடம் இருந்து நவீன ராடர்களை கொள்வனவு செய்ய இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது.

அந்த நிறுவனத்திடம் இருந்து 13 ஏ.டி.சி.ஆர். மற்றும் 33 எஸ் ரக ராடர்களும் அவற்றுடன் 13 எஸ்.ஆர்.எஸ். ரக ராடர்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

மூன்று ஆண்டுகாலத்தில் இந்த ராடர்கள் கட்டம் கட்டமாக விநியோகம் செய்யப்படும். அவை தமிழக கரையோரப் பகுதிகளில் பொருத்தப்படும். (12ஆம் பக்கம் பார்க்க)

### நத்தார் வாழ்த்துக்கள்



வாசகர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் உதயனின் மனங்கனிந்த நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## மாவட்ட அமைச்சர்கள் திட்டத்தை மீண்டும் கொண்டுவர ஜனாதிபதி ஏற்பாடு

கொழும்பு,டிசெ.25

ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் நடைமுறையில் இருந்த மாவட்ட அமைச்சர்கள் திட்டத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட அமைச்சர்கள் ஜனாதிபதியின் நேரடி நிர்வாகத்தின் கீழும் மேற்பார்வையிலும் செயலாற்றுவர்.

இது குறித்து இப்போது தீவிரமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதியின் அங்கீகாரம் விரைவில் கிடைத்ததும் மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் தன்னை இனங்காட்டிக்கொள்ள விரும்பாத உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மாவட்ட அமைச்சர்கள் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இப்போது ஊதிப் பருத்துள்ள அமைச்சரவையையும் வெட்டிக் குறைக்கவும் வாய்ப்பு உண்டாகும் என்று அரச உயர் வட்டாரங்கள் கருதுகின்றன.

இப்போதைய அமைச்சரவையில் 108 பேர் அங்கம் வகிக்கின்றனர். இந்த எண்ணிக்கையை 30 அல்லது 35ஆக குறைத்து விட ஜனாதிபதி உத்திதேசித்துள்ளார் என்று சொல்லப்படுகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)





புலிகளின் மதியுரைஞர் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்று லண்டனில் வடகிழக்கேயுள்ள வோல் தம்ஸ்ரோ கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது. அவருடைய திருவுருவப் படத்துக்கு துணைவியார் திருமதி அடேல் அம்மையார் மலரஞ்சலி செலுத்தி ஈகச்சுடர் ஏற்றுவதைப் படங்களில் காணலாம்.

## நத்தார் பண்டிகை அனைத்து உயிர்களுக்கும் அன்பும் கருணையும் காட்டுவதாக அமையட்டும்

### ஜனாதிபதி செய்தி

கொழும்பு,டிசெ.25

யேசு நாதரின் செய்தி பூரண அர்த்தத்தைப் பெற வேண்டுமாயின், நத்தார் பண்டிகை தாழ்ந்த மட்டத்தில் உள்ள மக்களில் இருந்து அனைத்து ஜீவராசிகளுக்கும் மனித அன்பு, கருணை பாராட்டுகின்ற பண்டிகைக் காலமாக அமைதல் வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது நத்தார் தினச் செய்தியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவரின் வாழ்துச் செய்தி வருமாறு-

கிறிஸ்மஸ் கால பண்டிகையானது உலகம் முழுவதும் சமாதானத்தோடு, அனைத்து மக்களிடையேயும் நல்லெண்ணத்துடனான மகிழ்ச்சியான செய்தியைக் கொண்டு வருகிறது.



கிறிஸ்மஸ் தினத்தில் பிறந்த இயேசு நாதர் போதித்த பணிவான, கருணைமிக்க செய்தியானது மத, இன, மொழி, குல வேறுபாடுகளால் சிக்குண்டிருக்கின்ற உலகத்திற்கு இன்றும் பொருத்தமானதாக இருக்கின்றது.

எமது நாட்டிலும் சமாதானத்திற்கும், நல்லுறவிற்கும் வழிகோலுகின்ற பரந்த புரிந்துணர்வும் பொறுமையும் அவசியமானதாகத் தோன்றுகின்றது.

ஒவ்வொரு நத்தார் பண்டிகையிலும் நான் ஞாபகமூட்டுகின்ற கிறிஸ்தவர்களின்

(12ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி, சரசாலைப் பிரதேசங்களில் ஆயுள்வேத மருந்தகங்கள் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.25

சாவகச்சேரி மற்றும் சரசாலைப் பிரதேசங்களில் ஆயுள்வேத மத்திய மருந்தகங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான அனுமதியை வடக்கு மாகாண சபை வழங்கியுள்ளது.

இந்த ஆயுள்வேத மத்திய மருந்தகங்களுக்கான வைத்தியர்களும் மாகாண சபையால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆரம்ப நடவடிக்கையாக இந்த மருந்தகங்கள் தற்காலிமாக இயங்கி மக்களுக்கான சேவையை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விரைவில் மருந்தக விடுதி சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டு ஆளணியினரும் நியமிக்கப்படவுள்ளனர். (202-131)

# குடாநாட்டில் நத்தார் கொண்டாட்டம் இம்முறை சோபிக்கவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.25

குடாநாட்டில் இம்முறை நத்தார் கொண்டாட்டங்களுக்கான ஆயத்தங்கள் பெருமளவில் சோபிக்கவில்லை. அமைதியான முறையிலேயே இம்முறை நத்தார் விழா அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வழமையான நத்தார் பண்டிகையை ஒட்டி நடத்தப்படும் கரோல் நிகழ்வுகள் கூட அதிகளவில் இடம்பெறவில்லை. ஒரு சில இடங்களில் மட்டும் கரோல் நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட்டு நடத்தப்படுகின்றன.

குடாநாட்டில் அன்றாடம் இடம்பெற்று வரும் கொலைகள், ஆள்கடத்தல்கள், காணாமற்போதல் என்பவையும் -

உடுபுடைவைகளின் விலையேற்றம், அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் ஆகியவையும் - சிறப்பான கொண்டாட்டத்துக்கு தடையாக உள்ளன என பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

மேலும் கரையோர மக்கள் கடற்றொழில் செய்வதற்கு உருவாகியுள்ள மட்டுப்படுத்த கடலெல்லை காரணமாக அதிகளவு மீனவர்கள் தமது தொழிலில் நாட்டமின்றி உள்ளதனால் நத்தாரை சிறப்பாகக் கொண்டாட முடியாமலுள்ளது எனவும் கரையோரப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (202-51)

# வெள்ளவத்தை மக்களுக்கு பொலிஸ் பிரசுரங்கள் விநியோகம்

கொழும்பு,டிசெ.25

பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் கையேடுகளைப் பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் வெள்ளவத்தைப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தைப் பகுதியில் சுமார் 12 ஆயிரம் குடும்பங்களை நாளை புதன்கிழமை முதல் சந்திக்கத் தீர்மானித்திருக்கும் பகுதிக்குப் பொறுப்பான பொலிஸார், தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து அறிவூட்டும் கையேடுகள், துண்டுப் பிரசுரங்களை வழங்குவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்துக்குரிய பார்சல்களை எவ்வாறு கையாள்வது, சந்தேகத்துக்குரிய நபர்கள் பற்றிப் பொலிஸாருக்குத் தகவல் கொடுப்பது பற்றிய அறிவுறுத்தல்கள் இந்தக் கையேடுகளில் விவரிக்கப்பட்டிருப்பதாக அறியமுடிந்தது. (சி)

# பயணிகள் கப்பல் சேவை வியாழனன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம்,டிசெ.25

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று இடம்பெறவிருந்த பயணிகள் கப்பல் சேவை நாளை மறுதினம் வியாழக்கிழமையே இடம்பெறும் என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இன்றைய கப்பலில் பயணம் செய்ய செயலகத்தில் அனுமதிச்சீட்டை பெற்றவர்களை நாளைமறுதினம் வியாழக்கிழமை பயணத்தை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (1)

# கிண்ணியாவில் இளம் யுவதி கடத்தல்

திருகோணமலை,டிசெ.25

திருகோணமலை கிண்ணியா பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் இனந்தெரியாதஆயுததாரிகளால் அவரது வீட்டில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

செல்வராசா பவானி(வயது18) என்ற இளம் யுவதியே ஆறு பேர் கொண்ட ஆயுதக்கும்பலால் ஞாயிற்றுக்கிழமை இரவு பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்டார் என உப்புவெளிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் பணிபுரிந்து வந்த இந்த யுவதி விடுமுறையை ஒட்டி வீடு திரும்பிய நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அறியமுடிந்தது. (சி)

# சாதாரணதர மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.25

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் யாழ்.றோட்டறிக் கழகம், யாழ். மையறோட்டறாக் கழகம் ஆகியனஇணைந்து நடத்தும் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 9 மணிமுதல் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நடந்து முடிந்த ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் தொழில்வாய்ப்புக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் இக்கருத்தரங்கு நடத்தப்படுகின்றது. (1)


ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

## 4ஆவது பிறந்தநாள் வாழ்த்து





ஜகராஜ் (ஹரிஷ்)

ஜீவராஜ் (கிருஷ்ணா)

சிவன்கோயிலடி, ஆவரங்காலை சேர்ந்தவர்களும் தற்போது கொழும்பில் வசிப்பவர்களுமான கணபதிஸ்வரகுரு-விஜயலக்ஷ்மி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரர்களான ஜகராஜ், ஜீவராஜ் ஆகிய இரட்டைச் சகோதரர்கள் தமது நான்காவது பிறந்தநாளை ஸ்ரீ வல்லிபுர மாயவன் திருவருளுடனும் நகுலேஸ்வரப் பெருமான் ஆசியுடனும் இன்று (25.12.2007) செவ்வாய்க்கிழமை தமது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகின்றார்கள். அவர்களை அன்புள்ள அப்பா, அம்மா, பூட்டன்மார், பூட்டிமார், தாத்தாமார், பாட்டிமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார் இவர்களும் அன்புத் தம்பி ரிஷயும் மற்றும் உற்றத்தார், சுற்றத்தார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்பாக வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
ச.க.சுதர்சனக்குரு J.P
(அப்பப்பா - பிரதமகுரு, ஸ்ரீ வல்லிபுரக் கோயில்)

சிவன்கோயிலடி, ஆவரங்கால்.


# எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மாதகல் கிழக்கு சிறுவர் பாதுகாப்புக் குழு எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை குழு அலுவலகத்தில் அண்மையில் நடத்தியுள்ளது.

மாதகல் கிழக்கு கிராம அலுவலர் இ.துரைராசா தலைமையில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்படி கருத்தரங்கு நடைபெற்றது. (அ-135)

# இலவச பாடநூல் விநியோகம் 2ஆம் திகதி

வடமராட்சி,டிசெ.25

பருத்தித்துறை கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்குரிய இலவசப் பாடநூல்கள் எதிர்வரும் 2ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளன.

இதற்கென பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் பொதிகள் பருத்தித்துறை கல்விக் கோட்டத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் வகுப்பு ரீதியாக இலவச பாடநூல்களை மாணவர்களுக்கு வழங்க ஏற்பாடாகி உள்ளது. (அ-160)

## அகவை எண்பதின் நினைவு



### ந.கந்தசாமி ஐயர்

| உருவாய்ப் | அருவாய்ப் |
|---|---|
| 1927 | 1998 |
| 12 | 05 |
| 25 | 17 |

நீடூழி வாழ்கவென்று வாழ்த்தும்
வாய்ப்பெமக்குக் கிட்டவில்லை
வாய்க்கரிசி இட்டவனும்
வந்துவிட்டான் நம் அருகே
ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ
அகால மரணம் என்றும் எங்கும்
அடுத்து நிகழாதிருக்க
அருள் புரிவீர் ஆண்டகையே.

மனைவி, மக்கள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
உரும்பிராய்.

(69319)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் பணிபுரியும் மு.சிவனேசன் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் தம்பையா முத்துக்குமாரு

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திட்டப்பணிப்பாளரும், அலுவலர்களும்,
புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

சித்ரா கந்தையா (திருமதி சித்ரா இராஜரட்ணம்) என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 498512500V) விசேட அ.அ. (இல. 0902007123), தொழில் அடையாள அட்டை என்பன யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 370, கோயில் வீதி, நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தொ.பே.2228430

## மரண அறிவித்தலில் தவறான தகவலுக்கு வருந்துகிறோம்

24.12.2007ஆம் திகதி 2ஆம் பக்கத்தில் வெளியான திருமதி கந்தப்பிள்ளை பவளம் என்பவரின் மரண அறிவித்தலில் சகோதரியான பிள்ளையம்மா என்பவர் காலஞ்சென்றவர் எனக் குறிப்பிடப்பட்டு தவறுதலாக தகவல் தவறானதாகும். அதற்காக வருந்துகிறோம் ... 

கல்வியங்காடு. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சிவப்பிரகாசம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியைய் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவப்பிரகாசம் அவர்கள் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இராசமனோகரியின் அன்புக் கணவரும் பிரேமகாந்தன், சிவகாந்தன், சசிகாந்தன், ராதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2007) பிற்பகல் 1.30 மணிக்கு சிவகாமி அம்மன் கோயிலடி இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு.

தகவல்
குடும்பத்தினர்.

### Dr.பரமநாதர் சிவசோதி

(தோல் வைத்திய நிபுணர், யாழ்ப்பாணம்,ஸம்பியா, லண்டன்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட Dr.பரமநாதர் சிவசோதி (21.12.2007) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற தபால் அதிபர் திரு. திருமதி பரமநாதர் அவர்களின் அருமை மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா(பிரக்கிராசி, குருநாகல்) அவர்களின் மருமகனும் காலஞ்சென்ற பரமானந்தனின் அன்புச் சகோதரனும் செல்வி சிவசோதி(லண்டன்), சிவகுமார்(அமெரிக்கா), திருமதி சரஸ்வதி வசந்த குமார்(கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (27.12.2007) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். அன்று அவருடைய காரைநகர் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய கண்டி,
காரைநகர். (69311)

தகவல்
அம்பலவாணர் செல்வராசா,
இராசையா பொன்னம்பலம்.

### திருமதி செல்வலிங்கம் கருணாநிதி



தெல்லிப்பழை, அம்பனையை பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கருணாநிதி(பவா) நேற்று (24.12.2007) திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை செல்வலிங்கத்தின் அன்பு மனைவியும், சின்னத்தம்பி - பசுபதி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சின்னதங்கச்சி தம்பதியினரின் மருமகளும்,மேனகா, ரவீந்திரன் (ஐஸ்வர்யா கொம்மினிகேஷன், ஆனைக்கோட்டை), மகேந்திரன் (சுவிஸ்) பாலேந்திரன், அமுதா(கனடா), சியாமளா (சுவிஸ்), ரேணுகா (லண்டன்), இரகுலேந்திரன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மகாலிங்கம் (தாரகா ரான்ஸ்போட்), வசந்தா தேவி, அற்புதலிங்கம், சந்திரலிங்கம் (ஜேர்மனி), வதனா (புத்தளம்), ஜெயவனிதா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, மடத்தடி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (69309)

தகவல்.
பொ.மகாலிங்கம்(மைத்துனர்),
இ.தங்கராசா(சகோதரன்)

### கணபதி இலட்சுமி



வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி இலட்சுமி 23.12.2007 ஞாயிற்றுக் கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதியின் மனைவியும், காலஞ்சென்ற காசி - வள்ளியம்மை தம்பதியினரின் மகளும் கோவிந்தர் - கதிராசி தம்பதியினரின் மருமகளும், தணிகாசலம், பிறைசூடி, செல்வராசா, ஜெயசுதா ஆகியோரின் தாயாரும், சுசீலா, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் ஜெயந்தி, செல்வராணி, சிவானந்தன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2007) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

62, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். (69323)

தகவல்.
பிறைசூடி (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுவில் பிரதேச செயலகத்தில் அண்மையில் சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிராந்திய ஆணையாளர் திருமதி ம.சிவலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் உதவிப் பிரதேச செயலர் மற்றும் சமூகசேவை அலுவலர்கள் காணப்படுவதையும் பிரதேச செயலர் த.மஞ்சுளாதேவி தலைமை உரைநிகழ்த்துவதையும் சிறுவர் முதியோர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# சவால்கள் நிறைந்த சமூக மாற்றத்திற்கேற்ப வாழ மாணவர்கள், இளையோருக்கு வழிகாட்டுதல் அவசியம்

## கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி சொல்கிறார்

சுழிபுரம்,டிசெ.25

சமூக, பொருளாதார, கலாசாரத் தளங்களிலும் தொழில்நுட்பத் துறையிலும் புரட்சிகரமான-சவால்கள் நிறைந்த மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டி ருக்கின்றன. அவற்றிற்கேற்ப நல்வாழ்வு வாழ்வதற்கு மாணவர்களுக்கும் இளையோருக்கும் கல்விப் புலத்திலுள்ளோர் வழிகாட்ட வேண்டும்.

இவ்வாறு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன் தெரிவித்தார்.

தி.முத்தரசன் எழுதிய 'கல்வியின் உளவியற் புலங்கள்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

இன்றைய காலம் மிக விரைவாக மாறி வருகிறது. சமூக, பொருளாதார, கலாசாரத் தளங்களிலும் தொழில்நுட்பத் துறையிலும் புரட்சிகரமான-சவால்கள் நிறைந்த மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

மாணவர்களும் இளையோர்களும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கி விரக்தி நிலைகளுக்கு உள்ளாகின்றனர். இவற்றிலிருந்து இவர்களை விடுபடச் செய்து நல்வாழ்வு வாழ வழிகாட்டல்களை நாம் வழங்கவேண்டும்.

இதற்கு இன்று இங்கு வெளியிடப்பட்டுள்ள கல்வியின் உளவியற் புலங்கள் நூல் ஆசிரியர் தி.முத்தரசன் போன்றவர்களது வழிகாட்டல் நல்ல பயனைக் கொடுக்கும் என்று கூறுவதில் மிக்க பெருமையுறுகின்றேன்-என்றார்.

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. பண்ணாகம் விசுவத்தனை முருக மூர்த்தி கோயில் பிரதம குருக்கள் பிரம்ம ஸ்ரீ ரவிபாஸ்கரக்குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் பேசுகையில்:

பல்வேறு வித்தியாசமான உளவியற் குடும்பப் பின்னணியைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்கின்றனர். அவர்கள் அனைவரினதும் தொழிற்பாடுகளை செம்மைப்படுத்தி நடைமுறைப்படுத்துவது ஆசிரியர்களது தலையாய கடமையாக உள்ளது. மாணவர்களின் உள நெருக்கீட்டுப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் கண்டு அவர்களைத் திறமைமிக்கவர்களாக விளங்கச் செய்யும் ஆற்றல் ஆசிரியர்களுக்கு வேண்டும். அப்படியான ஆற்றல்களைப் பெற இன்று வெளியிடப் படும் நூல் வழிகாட்டும் என்று நான் நம்புகிறேன் - என்றார். (202-28)

# தொலைபேசி இணைப்பு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.25

பண்டத்தரிப்பு-பிரான்பற்று உப தபாலகத்திற்கு முதற்கட்டமாக தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது.

வடக்கு - பிரதி அஞ்சல்மா அதிபர் வீ.குமரகுரு இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

தொலைபேசி வழங்கலுக்கான விவரங்களை உபதபாலகத்தில் பெற்று அதனை உரிய நிறுவனத்தின் ஊடாக அனுப்பி பெறப்படவுள்ளது. (203-95)

# ஓய்வுபெறும் அரச ஊழியர்கள் ஒரு மாதத்திற்குள் தமக்குரிய ஓய்வூதியத்தைப் பெற முடியும்

## கிடைக்காவிடில் தொடர்புகொள்ள கேட்கின்றார் பிரதம செயலாளர்

அச்சுவேலி,டிசெ.25

ஓய்வுபெறும் அரச ஊழியர்கள் தாம் ஓய்வுபெற்ற நாளிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். அவ்வாறு கிடைக்காதவிடத்து பிரதம செயலாளர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் அறிவித்துள்ளார்.

வட மாகாண சபையின் கீழ் கடமை புரிந்து ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குவதில் கால தாமதம் ஏற்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்தே வடமாகாண பிரதம செயலாளர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

வட மாகாண சபையின் பொது நிர்வாக அமைச்சுக்கு கிடைத்த ஓய்வுபெற்ற ஊழியர்களது ஊய்வூதியம், அவர்களது சொந்தத் தொழிலுக்கான நஷ்டஈடு உட்பட அனைத்தும் நிலுவையின்றித் தீர்வுகண்டு உரிய அமைச்சுக்கும் நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வட மாகாண சபையின் கீழ் வேலை செய்து ஓய்வுபெற்றவர்கள்-இதுவரை ஒரு மாதத்துக்குள் தங்களது ஓய்வூதியம் கிடைக்காதவர்கள் உடனடியாகத் தங்களது பெயர், விலாசம், ஓய்வுபெற்றபோது வகித்த பதவி, திணைக்களம், ஓய்வுபெற்ற திகதி, ஓய்வூதியத்துக்கு விண்ணப்பித்த திகதி ஆகிய விவரங்களுடன் பிரதம செயலாளர், வட மாகாணசபை, வரோதய நகர், திருகோணமலை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதம செயலாளர் மேலும் அறிவித்துள்ளார். (202-11)

# இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையை, மேற்தரக் கிளையாகத் தரமுயர்த்தக் கோரிக்கை

வடமராட்சி, டிசெ.25

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையை முதற்தரக் கிளையாக தரமுயர்த்துமாறு பருத்தித்துறை வர்த்தகர்கள் இலங்கை வங்கி தலைமைப் பீடத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வர்த்தகர்கள் சார்பில் பருத்தித்துறை நகர வர்த்தகர் கே.தங்கராசா இக்கோரிக்கையை விடுத்துள்ளார். இலங்கை வங்கியின் 28ஆவது கிளையாக 1959ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பருத்தித்துறை கிளை எதிர்வரும் 2009இல் 50 ஆண்டுகள் நிறைவுற்று பொன்விழரவைகக் கொண்டாடவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் முதலாம் தரக் கிளையாக நீண்டகாலமாக இயங்கி வரும் இக்கிளை மேற்றரக் கிளையாக தரம் உயர்த்தப்பட்டு இதன் சேவை பருத்தித் துறைப் பகுதி மக்களுக்கு மேலும் வழங்கப்பட வேண்டும் என அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-160)

# பாடநூல் விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் விநியோகம் இன்றும் நாளையும் காலை 8.30 மணிக்கு கோட்டக்கல்வி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை உரும்பிராய், கோப்பாய் பாடசாலைகளுக்கு, நாளை புதன்கிழமை அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி பாடசாலைகளுக்கும் பாடநூல் விநியோகிக்கப்படும் என கோட்டக்கல்வி அலுவலர் எஸ்.சித்திரவடிவேல் தெரிவித்தார். (202)

* * *

பருத்தித்துறை, டிசெ.25

பருத்தித்துறை கல்விக்கோட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் வழங்கப்படவுள்ளதாக பருத்தித்துறை கோட்டக் கல்விப்பணிப்பாளர் பா. இரகுநாதன் தெரிவித்துள்ளார். (202-226)

# செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.25

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 7இல் செயன்முறைத் திறன்களும் தொழில்நுட்பமும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை நெல்லியடி ஆசிரியர் நிலையத்தில் புதிய கலைத்திட்ட மாற்ற அறிவூட்டல் செயலமர்வு நடைபெறும் என வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார். (202)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜீ.சி.ஈ. சாதாரண தரத்தில் வர்த்தகமும் கணக்கீடும் பாடமும் ஜீ.சி.ஈ. உயர் தரத்தில் கணக்கீடு பாடமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இரு நாள்கள் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

அடுத்த வருடம் இவ்வகுப்புகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ள மேற்படி பாடங்களுக்கான புதிய கல்வி சீர்த்திருத்தத்தின் அடிப்படையிலான பாடத்திட்ட மாற்றம் தொடர்பாக இச்செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

நாளையும் நாளை மறுதினமும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ள செயலமர்வுகளில் வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் வர்த்தக பட்டதாரி, வர்த்தக பாட பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-207)

# ஒளி விழா நிகழ்வுகள்

சுட்டைவேலி,டிசெ.25

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபை பிரார்த்தனை மண்டபத்தின் 12ஆம் வருட நிறைவு விழாவும், கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா மற்றும் வழிபாடுகள் எதிர்வரும் சனிக்கிழமை, பருத்தித்துறை - கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட் திரு.டேவிட் அழகராசா தலைமையில் நடைபெறவுள்ளன. (202-275)

* * *

குடத்தனை,டிசெ.25

குடத்தனை அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையின் கலப்பை சிறுவர் நற்தூது பணிமன்றம் நடத்தும் ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலப்பை சிறுவர் நற்றூது பணிமன்றத்தின் தலைவி செல்வி குபிதா சிவனேந்திரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எம். சிறிஸ்கந்தகுமார் கலந்துகொள்வார். (202-78)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.25

இருபாலை கானான் ஜெபஆலயத்தின் ஒளிவிழா நிகழ்வுகளில் இன்று செவ்வாய்க் கிழமை நள்ளிரவு ஜெபஆலயத்தினரின் நத்தார் ஆராதனை இடம்பெறவுள்ளது.

நாளை புத்தூரிலும் 27ஆம் திகதி வட்டுக்கோட்டையிலும் ஒளிவிழா இடம் பெறும். 28 மற்றும் 29ஆம் திகதிகளில் ஜெப ஆலயத்தில் சிறுவர் நிகழ்வுகளும் 30ஆம் திகதி உடுவிலில் ஒளிவிழாவும் 31ஆம் மற்றும் முதலாம் திகதிகளில் ஜெபஆலயத்தில் விழிப்பிரவு ஆராதனையும் இடம் பெறவுள்ளன. நிறைவாக 2ஆம் திகதி நீர்வேலியில் ஒளிவிழா இடம்பெறும்.

* * *

பருத்தித்துறை,டிசெ.25

பருத்தித்துறை பங்கின் ஒளிவிழா நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று செவ்வாய்க் கிழமை பி.ப 2 மணிக்கு புனித அந்தோனியார் ஆலய மன்ற அரங்கில் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. பேனாட் றொக்னோ அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சக்கோட்டை ஆலய பங்குத் தந்தை அருட்திரு ம.பத்திநாதர் கலந்துகொள்வார்.(226)

# மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி வடக்குப் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை எதிர் வரும் 30ஆம் திகதி கைதடி - நவபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

கண் இரத்த அழுத்தம், நீரழிவு, சர்ம நோய், வாய்ப்புற்று, பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படுமென கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (202-207)

# ஊர்காவற்றுறையில் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு

குருநகர்,டிசெ.25

ஊர்காவற்றுறைப் பகுதியில் சோளம், நிலக்கடலை, பழ உற்பத்தி ஆகியவைகள் ஊக்குவிக்கும் நோக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.


சோளச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் புளியங்கூடல் சுருவில், கரம்பொன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நாற்பது விவசாயிகளுக்கு விதை சோளம் , இரசாயன வளமாக்கிகள் வழங்கப்பட்டு தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

நிலக்கடலைச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் சுருவில், கரம்பொன் பகுதிகளைச் சேர்ந்த 18 விவசாயிகளுக்கு ஆயிரம் சதுரமீற்றர் பரப்பளவில் பயிர்செய்யக்கூடிய விதத்தில் விதை நிலக்கடலை , இரசாயன வளமாக்கி என்பன வழங்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து அண்மையில் நடைபெற்ற ஊர்காவற்றுறை பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (202-51)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு



01.04.2007இல் 36 வருட சேவையையும், 25.12.2007இல் 59 வயதையும் பூர்த்தி செய்து 25 ஆண்டுகள் எமது கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற யா/விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர்

**திரு முத்தையா இராஜேந்திரன்**

அவர்களின் சேவைநயப்புப் பாராட்டு வாழ்த்து

கால் நூற்றாண்டாய்க் கால் பதித்த சுவடுகள் விளையாட்டுத் துறையில் வீரற்றடங்களாய்க் காலங்காலமாய்க் கழியாது நிற்கும். ஆல்போல் தளிர்த்து விழுது விட்ட நுணுக்கங்கள் தொழில் நுட்பத் துறையில் அழியாது தொடர்கதையாய்த் தொடர்ந்து வரும். ஆண்டுகள் கடந்தோட சேவைக்காலம் 'செல்' எனக் கட்டளை யிட்டாலும் சேவைகள் பேர்சொல்லும் ஆசிரியத்துவத்துக்கேயுரிய மகத்துவம். ஆண்டாண்டாய்த் தொடர்ந்து அணையாத தீபமாக ஒளிரும்.

யா/விக்ரோறியாக் கல்லூரி
சமூகம்.

(69134)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 23 ★ 04 ★ 1938



விண்ணில் 25 ★ 12 ★ 2006

**அமரர் நாகரத்தினம் நவரத்தினம்**
(கௌரி நவம் அண்ணா)

அப்பா!
இங்கு ஆயிரமாயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்கள் அன்புக்கு இணையாகாது

என்றும் உங்கள் நினைவுடன் பாசமுள்ள
மனைவி,
மற்றும் குடும்பத்தினர்.

பொன்கந்தையா வீதி,
நெல்லியடி,
கரவெட்டி. (69303)

## 31ஆம் நாள் நினைவு

பிறப்பு 24 ★ 04 ★ 1946



இறப்பு 25 ★ 11 ★ 2007

**அமரர் தம்பித்துரை அன்ரனி ஜீவானந்தம்**

காலங்கள் எத்தனை சென்றாலும்
எம்மூச்சிருக்கும்வரை உமது
நினைவுகள் எம் நெஞ்சில்
என்றும் பசுமையாகவே
நிலைத்திருக்கும்.

எமது குடும்பத் தலைவரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் நல்லடக்கத்தின் போது உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் அன்றைய தினம் பல வழிகளிலும் உதவி நல்கிய அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் இல்லத்தில் இன்று 25.12.2007 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (69273)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், மச்சான்,
மச்சாள்மார்.

## வீடு விற்பனைக்கு

நல்லூர் பின் வீதியில் 2¼ பரப்புக் காணியில் கடையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
356, கோயில் வீதி, நல்லூர்.
T.P.: 0776969065

வெளிவந்துவிட்டது
**அஷ்டலக்ஷ்மி கலண்டர்கள்**
தினக்கலண்டர்:- 230/
மாத படக் கலண்டர்: 130/
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.
அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை,
"மயிலகம்",
271/15, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (69091)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறையிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம் நல்லூர் பாம் சென்ரர்,19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (69300)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறையிலர் குஞ்சுகள் PIRIMA சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 27.12.2007 விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

* றாஜீவ் - நவாலி வீதி ஆனைக்கோட்டை.
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி
* P. ரவி - தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரி.
* சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு

(69298)

## நிகழ்வுகள்

பருத்தித்துறை, டிசெ.25

பருத்தித்துறை மாதனை மெதடிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் க.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் கலந்து கொள்வார்.

(202-226)

* * *

வடமராட்சி, டிசெ.25

அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 155 ஆவது ஜயந்திதினம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் காலை 7 மணிக்கு பூஜையும் பிற்பகல் 12.30 மணிக்கு விசேட பூஜைகளும் ஜயந்திதினத்தை முன்னிட்டு இடம்பெறும்.

### சமாதானம் வேண்டிக் கணபதி ஹோமம்

யாழ்ப்பாணம், டிசெ.25

நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் வேண்டி மிருசுவில் உசன் கஜகேணிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று கணபதி ஹோமம் நடைபெறும்.

### சான்றிதழ்களைப் பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.25

கந்தர்மடம் ஐ.ஏ.ரி சித்திரப்பயிற்சி நிறுவனம் நடத்திய சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சையில் சித்தியடைந்தமாணவர்களை எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நிறுவனத்திற்கு சமூகம் தந்து சான்றிதழை பெற்றுச் செல்லுமாறு நிறுவனத்தின் இயக்குனர் கேட்டுள்ளார்.

சித்தியடைந்த மாணவர்களின் விவரம் வருமாறு:

ர.ஜெயராஜ், ந.ராஜாஜி, சி.ரவின்சன், ந.பிரதாஸ், அ.கெளசிலியா, தெ.அகிலன், ஜெ.அருள்ராஜ், வி.ஜெயச்சந்திரன், ஜெ.சுதர்சன், வி.விஜயசாந்தி, சி.சஜீபன், செ.ரஜீஸ்

## SATHEES TRAVEL AGENCY
### உடனடி வேலை வாய்ப்பு

**DUBAI**
பாதுகாவலர், சாரதி


**DOHA QATAR**
காப்பென்ரர், மேசன், ஜெனரல் லேபர்
பிளம்பர், எலக்ரிசன், A/C மெக்கானிக்

**SAUDI ARABIA**
பாதுகாவலர் (Security), ஜெனரல் லேபர்
A/C மெக்கானிக்

E-mail:- sathees agency @ hotmail. com
Regd No: VSW/FIN/BR/936/1-2004
T.P: 021 4591625, 0776138942. (69266)

தொடர்பு: K சதீஸ்,
உடுவில் வீதி,
மானிப்பாய்.

## 45ஆம் நாள் நினைவலைகள்



**பரமநாதன் ஜெயக்குமார்** (ஜெயா)
திதி: 25.12.2007

எம் இனிய பாசமான ஜெயாவே!
பாதியிலே எங்களைத் தவிக்கவிட்டு சென்றாயோ
மனமின்று உன் நினைவில் சுமையானதே
நாள்கள் நகர்ந்தாலும் நம் பாசங்கள் மாறிடுமா?
காலம் வந்து பறித்ததடா உன் உயிரை
பொத்திப் பொத்தி வைத்திருந்த உன்முகம்
எமையறியாது தொலைந்து போனதே
எங்கள் உயிரான ஜெயாவே கண்ணீரால்
உனது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

தாவளை இயற்றாலை,
கொடிகாமம். (69208) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

*அரசரட்ணம் பரமேஸ்வரி* (இன்பம்)



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான திருமதி அரசரட்ணம் பரமேஸ்வரி (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் அமரர் வேலுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், அரசரத்தினத்தின் மனைவியும், தர்சினி,பிருந்தினி, சுஜிந்தன், சுபாசினி ஆகியோரின் பாசமிகு தாயும், மோகனதாஸ், ரவிச்சந்திரன்,அனித்தா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நோற்று (24.12.2007) பொறளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.தங்கேஸ்வரன் (மைத்துனர்)
திருவருள்சோதி (தங்கை - குஞ்சு)

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (54797)

## ஐந்தாம் வருட நிறைவின் நினைவு



பிறப்பு 01.10.1982
இறப்பு 25.12.2002

செல்வி
**சோபியா ஜொய்சி மகேந்திரன்**

இருபது வருட மனுவுரு வாழ்வில்
ஆயிரமாயிரம் இன்பங்கள்
தந்தவள்
வெளியுரு அகற்றி விண்வெளி
புகுந்து
எம் இதய நட்சத்திரமாகியவளின்
ஐந்தாம் வருட நிறைவின் நினைவு.

இல.42, இராச வீதி
நல்லூர்.

மகேந்திரன் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து உன்னை நேசிக்கிறார்; உனக்காகவே பிறந்தார்; நீ கொண்டாடும் பண்டிகையில் அவர் இருக்கிறாரா.........?



மார்கழி பிறந்து விட்டாலே எல்லோருக்கும் ஒரு குதூகலம்.

அப்படிப்பட்ட மனநிலை மக்கள் மத்தியில் உருவாகுவதற்கு ஏதுவாகக் கடைகள், சூப்பர் மார்க் கட்டுகள் யாவும் களைகட்டி-கொடிகட் டிப் பறக்கும். வீடுகள் மெருகேறும், பாடசாலை விடுதலையும் சேர்ந்து கொள்வதால் பிள்ளைகளுக்கும் கொண்டாட்டம். வெளிநாடுகளுக்கு வாழ்த்து மடல்கள் அனுப்புபவர்கள் அவசரமாய் அனுப்பி விடுவார்கள். எங்கே பார்த்தாலும் விநோதமான ஒளி விளக்கு அலாங்காரங்களும், மலிவு விற்பனைகளும், திடீர் உணவுக் கூடங்களும் சொல்லவே தேவையில்லை. தேடப்படாத அநாதை இல்லங்களும், முதியோர் இல்லங்களும் தேடப்படும். புண்ணியம் தேடவோ புகழ் தேடவோ அங்கெல்லாம் பரிசில்கள்,உணவு வகைகள் கொடுக்கப்படும். மார்கழிக் குளிரும், மயக்கம் தரும் பாடல்களும், பிரபல்யமான விற்பனை நிலையங்களில் வெளிப்புற அலங்காரங்களும் மக்களை இந்த உலகையும் அதன் துன்பங்களையும் மறக்கச் செய்து விடுகின்றன. இந்த அலங்காரங்களில் முக்கியத்துவம் வகிப்பது, கிறிஸ்மஸ் மரமும் கிறிஸ்மஸ் தாத்தாவும்தான். போதாதற்கு இப் பண்டிகை நாள்களில் விதம் விதமான குடிவகைகள் என்ன, கெண்டாட்டங்கள் என்ன? நத்தாரிற்குக் குடிப்பதற்கு என்றே பத்திரப்படுத்தி வைத்திருந்த வெளிநாட்டுக் குடிவகைகள் எல்லாம் வெளியே வரும். இன்னும் எத்தனையோ சொல்லலாம். இதுதான் நத்தார் பண்டிகையா? இவைதான் நத்தார் சந்தோஷங்களா? இல்லை! இல்லவே இல்லை!

அருமை பெருமையாகக் காத்திருந்து பெற்றுக்கொண்ட குழந்தையின் நிமித்தம் ஒரு கொண்டாட்டம் வைத்தனர் பெற்றோர். அன்பர்களும் நண்பர்களும் ஏராளமாக வந்து தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையைப் பார்த்து பரிசில்களும் கொடுத்து, முன்சாலையில் நடந்த மிகப் பெரிய விருந்தில் கலந்து கொண்டனர். எல்லோரும் தங்களை மறந்து குதூகலித்துக் கொண்டிருந்த போது திடீரென குழந்தையின் ஞாபகம் வரவே, தொட்டிலுக்கு ஓடினாள் அம்மா. அங்கே பரிசுப் பொருள்களினால் மூடப்பட்ட நிலையில் குழந்தை செத்துப் போய்க் கிடந்தது. குழந்தை இல்லாமல் குழந்தைக்குப் பிறந்தநாள் கொண்டாட்டம். இது என்ன?

இன்றைய நிலைமையும் அதுதான். தெரிந்தோ தெரியாமலோ உலகம்முழுவதும் இந்த நத்தார்ப் பண்டிகையை விட்டு விடுவதில்லை. எல்லோரும் கொண்டாடுவார்கள். நத்தார்த் தாத்தா யார்? கிறிஸ்மஸ் மரம் என்பது என்ன? கொண்டாட்டங்களுக்கும் குடிவகைகளுக்கும் என்ன பங்கு? அலங்காரங்களுக்கும் ஆடம்பரங் களுக்கும் என்ன சம்பந்தம்? இந்த நத்தார் நாயகன் யார்? அவர் யார்? அவரை வெளியேற்றி விட்டு, இது என்ன கொண்டாட்டம்.

CHIRISTMAS என்பது CHIRIST+MASS. அதாவது, எல்லோருக்கும்

## நத்தார் கிறிஸ்தவருக்கு மட்டுமல்ல

கிறிஸ்து. அந்த கிறிஸ்துதான் நத்தார் நாயகன். விடுதலையின்றித் தவிக்கும் மனுக்குலத்தின் ஆத்ம விடுதலைக்காகத் தம்மையே மரணத்திற்கு ஒப்புக் கொடுக்க வந்த கிறிஸ்து பிறந்ததை நினைவு கூரும் நாள்தான் இந்த நத்தார் நாள். அவர் பிறந்திராவிட்டால் என்பது அல்ல; அவர் மரித்து உயிர்த்தெழுந்திராவிட்டால் இந்த நத்தார் என்பது இருந்திராது. மனிதனாகப் பிறக்கின்ற ஒவ்வொருவருக்குமாகத் தம்மைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவை மறந்து விட்டு, வெறும் கொண்டாட்டத்திற்கு எது அர்த்தம்? இந்தப் பண்டிகை யாருக்காக? இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே, இயேசு கிறிஸ்து உனக்காகப் பிறந்தார்; உன்னைத் தம்மோடு சேர்த்துக் கொள்வதற்காகத் தம்மையே பலியாகக் கொடுக்கப் பிறந்தார். உனக்காகத் தம்மைப் பலியாக அர்ப்பணித்த அந்த இயேசு உன் பண்டிகை க் கொண்டாட்டங்களை அல்ல; அவர் உன்னை நேசிக்கிறார். அவர் உனக்காகவே பிறந்தார். இந்த இயேசு நீ கொண்டாடும் பண்டிகையில் இருக்கிறாரா?

-சாந்தி பொன்னு

## அமைதி கொடு தேவா!

அகிலத்தைப் புடம்போட வந்தவரே போற்றி
அனைவர்க்கும் அன்புறவைச் சொன்னவரே போற்றி
அசுத்தத்தைப் பூமியிலே துடைத்தவரே போற்றி
அலகையின் கொட்டத்தை அடக்கியவரே போற்றி!

வீறாப்புக் கதைத்தோரை வீழ்த்தினீரே பாலா
விசம் கொண்ட நெஞ்சினரை பெயர்த்தீரே பாலா
வானகத்துக் கீதங்களைப் பரப்பினீரே பாலா
வந்தெமக்கு வாழ்வு வரம் தந்திடுவீர் பாலா!

மன்னிப்பைப் பகைவருக்கும் கொடுத்தவரும் நீரே
மலைபோன்ற துன்பத்தை விரட்டியவரும் நீரே
மரணத்தைத் துரும்பாக்கி வென்றவரும் நீரே
மண்ணுலகில் அமைதியினை விதைத்தவரும் நீரே!

இன்னல்கள் படுவோரை காத்திடுக தேவா
இனவாத மோதல்கள் அடங்கட்டும் தேவா
இனி எங்கள் தமிழ்த்தேசம் விடியட்டும் தேவா
இலங்கையிந்தத் தீவினிலே அமைதி கொடு தேவா!

அ. தூரியன்
(ஊறணி).






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் நத்தார் சிறப்பு மலர்-2007


## நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

செலிங்கோ வீடமைப்புக் கடன் சங்கம் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்களையும் புதுவருடம் இனிதே மலர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

* வீடமைப்புக் கடன்களுக்கான சேமிப்புக் கணக்குகள்
* சேமிப்புக் கணக்கிற்கு 14வீதம் வருடாந்த பங்கு லாபம்
* நிலையான வைப்புகளுக்கு அதிகூடிய பங்கு லாபம்
* சிறுவர்களுக்கான நீண்ட கால முதலீடுகள்



CBSL

செலிங்கோ வீடமைப்புக் கடன் சங்கம்,
24, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4255
E-MAIL:CBSLJF@SLTNET.LK
(MEMBER OF CEYLINCO CONSOLIDATED)


## மீட்பர் இயேசு பிறந்து விட்டார்

இவ்வுலகில் தோன்றுமுன் யாருக்கும் வரலாறு இருந்ததில்லை. கருவாகி உருவாக முன்னே அவரின் செயலை யாரும் கணக்கிட்டதுமில்லை. மண்ணிலே மனிதன் பிறக்கின்ற அன்றுதான் அவனது வாழ்க்கை தொடங்குகிறது. இது இறைவனது திட்டம் - இயற்கையின் சட்டம். ஆனால் இயற்கையின் நியதி மாறி ஒருவரின் பிறப்பு பல காலங்கள் முன்பே முன்னறிவிக்கப்பட்டு காத்திருந்த வருகை தந்தவர் எம்குழந்தை யேசு. யேசுவின் வருகைக்காக ஏங்கி நின்று எதிர் நோக்கியவர் ஏராளம். வையகம் அரவது வருகைக்காக வாஞ்சையோடு விண்ணோக்கி நின்றது. வாடிய பயிர் வருமழையைத் தேடுவது போல் இறைமகனை மக்கள் எதிர்பார்த்து நின்றனர்.

மார்கழி மாதம் யூதா நாடு. பெத்லகேம் என்னும் சிற்றூர். இருள் நிறைந்த மாட்டு க்குடில், பனிபெய்கிறது. வாடைக்காற்று வீசுகிறது. இறைவாக்கினரால் முன்னறி விக்கப்பட்டபடி கன்னியின் மகனாய் வந்துதித்தார் எம்பரமன் யேசு.

மலைக்குகை இவரது மாளிகை. வைக் கோல் இவரது மலரணை. ஆடு, மாடு இவரது உறுதுணை. வெறுமையில் வறுமையில் எழுந்தார் கிறிஸ்து.

இன்று அப்பெருமகன் யேசுக் கிறிஸ்துவின் பிறப்பு விழா. இன்றைய இந்நன்நாளில் எம் மனங்களின் அழுக்குகளை அகற்றி தன்னலம் மறந்து பிறர் நலம் பேணுபவர்களாக எம்மை மாற்றுவோம். எம்மிடையே உறுதியான ஒற்றுமையையும் அன்பையும் வளர்ப்போம். இந்த ஒற்றுமையே எம் வாழ்வின் மகிழ்வுக்கு இட்டுச்செல்லும்.

கிறிஸ்து பிறப்பு விழா கிறிஸ்தவ மக்கள் அனைவருக்குமே ஒரு பெருவிழா. அது மட்டுமல்ல தொடர்ந்து சில நாள்களுக்கு உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்தவ சமூகங்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருக்கும். வருடா வருடம் வரும் திருவிழாத் தானே என்ற எண்ணாமல் ஒவ்வொரு வருடமும் புது விழாவாக புதுச் சிந்தனைகளுடன் கொண்டாடுகின்றோம்.

இந்தப் பிறப்பு விழாவினை ஆனந்தமாகக் கொண்டாடத் தவறாத நாம் அவர் எமக்குப் போதித்தவற்றைக் கடைப்பிடிக்கின்றோமா?

அடக்குமுறைகளைக் களைந்தெறிந்து ஒவ்வொரு மனிதனின் உரிமை களையும் மதித்துக் கிறிஸ்து யேசுவின் பிறப்பு விழாவிற்குப் புதுஅர்த்தம் கொடுப்போம்.

-உதயநிலா


அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்
எந்நாளும் எப்போதும்
எந்நேரமும் எழிலும் உறுதியும்
நிறைந்த தளபாடங்களுக்கு
இன்றே விரையுங்கள்
திரேசா
தளபாட மாளிகை
155, 157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



நிரந்தர சமாதானம் எம்மிடம் சேர அனைவருக்கும் எம்மினிய நத்தார் நல்வாழ்த்துகள்
அழகுக்கு அழகுதரும் நவநாகரிக ஆடைகளுக்கு
நம்பகமான ஸ்தாபனம்
காவேரி சில்க்ஸ்
அழகுமிக்க காவேரிக்கு
விஜயம் செய்யுங்கள்!
குறிப்பு: வாடிக்கையாளரின் நலன்கருதி எமது மலிவு விற்பனை தொடர்கிறது
இல. 48, பெரியகடை, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 2333.



புனித நத்தார் காலத்தில்,
சமாதானமாகவும், மகிழ்ச்சியுடனும்
நாம் அனைவரும் ஒன்றிணைந்து வாழ
சகல இலங்கையர்களினதும் மனங்கள்
புதுப்பொலிவுடன் திகழட்டும்..

இனிய நத்தார் வாழ்த்துக்கள்




www.peoplesbank.lk

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் நத்தார் சிறப்பு மலர்-2007

## இன இணக்கத்தை ஏற்படுத்தும் தீர்வுத்திட்டத்தை முன் வையுங்கள்



இன இணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தீர்வுத்திட்டத்தை உடன் முன் வையுங்கள்.

கைதுகளும், காணாமற்போதல்களும், கொலைகளும், மரண அச்சுறுத்தல்களும், போர் மேகங்களும் சூழ்ந்துள்ள நிலையில் 2007ஆம் ஆண்டிற்கான நத்தார் பண்டிகையை எதிர்கொண்டுள்ளோம்.

பயத்திலும் பதற்றத்திலும் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்விலும் பாதுகாப்புத் தேடி எங்கு செல்வோம் என்ற அங்கலாய்ப்பிலும் நாம் வாழ்ந்துகொண்டிருப்பதால் நத்தார் பண்டிகையை மகிழ்வுடன் கொண்டாடும் நிலை இம்முறை இல்லை. போர்ச் செயற்பாடுகளை நீக்கி பேச்சுகள் மூலம் நீடித்த அமைதியைக் கொண்டு வருவதற்கான செயற்பாடுகள் அருகிவிட்டன. போருக்கான அறைகூவலே எப்பக்கம் திரும்பினாலும் கேட்கிறது. இந்த நிலையில் அமைதியின் அரசராக இனங்களை ஒன்றிணைக்கும் பாலமாக பிறந்த பாலக இயேசுவின் நத்தார் பண்டிகைச் செய்தியில் நாம் உரத்து வலியுறுத்த விரும்புவது ''அனைத்து வன்செயல்களையும் நிறுத்துங்கள். போர் ஆயுதங் களுக்கு ஓய்வு கொடுங்கள். இனங்களுக்கிடையில் இணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தக்கூடிய தீர்வுத்திட்டங்களை உடன் முன்வையுங்கள். அமைதிக்கான பேச்சுகளை உடன் ஆரம்பியுங்கள்'' என்பதாகும்.

இதுவே இன்றைய நிலையில் துன்பத்திலும் வேதனையிலும் வாடும் தமிழ்மக்கள் பேரால் விடுக்கப்படும் வேண்டுகோளாகும். இம்முறை நத்தார்ப் பண்டிகையோடு ஒட்டிய கேளிக்கைகள், கொண்டாட்டங்கள், வெளிஆடம்பரங்கள் என்பனவற்றை அறவே தவிர்த்து நத்தார்ப் பண்டிகையை வெளி ஆடம்பரங்களற்ற அர்த்தமுள்ள ஆன்மீக விழாவாகக் கொண்டாடுங்கள். பிறரன்புச் செயல்களையும்; அன்பின் பகிர்தல்களையும்; இரக்கச் செயல்களையும்; பொதுநல பணிகளையும் செய்து பாலக இயேசுவின் ஆசிகளை நிறைவாகப் பெற்று புதிய ஆண்டை வரவேற்கத் தயாராகுங்கள்.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்.

## மானுட மாண்பு மறுக்கப்படுமிடத்தில் இறைவன் தலையிடுகின்றார்



இந்த கிறிஸ்மஸ் காலத்தில் உங்களை வாழ்த்துவதில் மகிழ்வுறுகிறேன்.

கிறிஸ்மஸ் என்பது கடவுள் கிறிஸ்துவில் மானுடத்தைத் தேடிவந்த நிகழ்வாகும். இது கடவுளுக்கு மானுடம் அவசியம் தேவை என்பதை சுட்டி நிற்கின்றது. மானுடக் கூட்டுறவில் கடவுள் கொண்டுள்ள வாழ்க்கையையே எடுத்து இயம்புகிறது. மட்டுமல்ல, கடவுள் மானுடத்தைத் தமது சாயலில் படைத்தபடியினால், அந்த சாயல் மங்காமல் பாதுகாப்பதும் அவர் பணியாகிறது. எனவே கதறியழும் மானுடத்தை அதன் சாயல் இழந்து போகா வண்ணமாகப் பாதுகாப்பதும் கடவுள் தமது குமாரனை அனுப்பியதன் இன்னொரு நோக்கமாகும்.

ஆதலால், எங்கெல்லாம் மானுட மாண்பு மறுக்கப்படுகிறதோ, எங்கெல்லாம் மானுடத்திலுள்ள இறைச்சாயலுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறதோ அங்கெல்லாம் கடவுள் தலையிடுகிறார். ஒவ்வொரு தடவையும் கிறிஸ்மஸ் கொண்டாடப்படும்போது இவ்வுண்மையையே நாம் உள்வாங்கிக்கொள்கின்றோம்.

கடவுளோடு உறவாடுவதும், அந்த உறவுக்கு எந்தவகையில் பங்கம் பராமல் மானுட உறவுகளைப் பேணிக் கொள்வதும் எம்மொவ்வருவரின் மீதும் விழுந்த சுமையாகும்.

இன்று நம்மவர்கள் அனுபவிக்கின்ற சொல்லொணா வேதனைகள்; உபத்திரவங்கள்; அவலங்கள் அனைத்தினின்றும் விடுதலை கிட்டும் என்று எம்மை நம்பிக்கையுடன் வைத்திருப்பதே கிறிஸ்மஸ் நமக்குத் தரக்கூடிய செய்தியாகும். இந்த நம்பிக்கையை உடைய மக்களாகிய நாம், அனைத்து மக்களுக்கும் இந்நம்பிக்கையை ஊட்டிட இறைவன் அழைக்கிறார். எம்மைப் பிடித்துள்ள காரிருள் நீங்கிட வரலாற்றில் தலையீடு செய்திட்ட இறைவன், ஏற்ற விமோசனத்தை அருளுவாராக.

பேரருட் கலாநிதி டீ.எஸ். தியாகராஜா,
பேராயர், தென் இந்திய திருச்சபை - யாழ். பேராயம்,
தலைவர், அமெரிக்கன் இலங்கை மிஷன்.

## உலகின் ஒளியாம் ஏசுவின் ஒளியைப் பெற்று ஒளிர்வோம்



இறைமக்கள் யாவருக்கும் ஊனுடற் தாங்கிய இயேசு பெருமானின் பிரசன்னமும் அடைக்கலமும் ஆசீர்வாதமும் நிலையான அமைதியும் உண்டாவதாக.

எமது வாழ்வு பல இடர்பாடுகளைக் கொண்டது. இருள் சூழ்ந்திருப்பதையே காண்கிறோம்.

கிறிஸ்து பெருமான் உலகின் ஒளி, இந்த ஒளியைக் குறித்து யோவான் தமது அருட்செய்தி நூலில் கூறுவது - ''இயேசுவுக்குள் இருந்த மெய்வாழ்வே மக்களுக்கு ஒளியாயிருந்தது. எங்கு இருள் உளதோ, அங்கு இந்த ஒளிச்சுடர் வீசிக்கொண்டிருக்கிறது. இருளால் அதை அடக்கிவிட இயலவில்லை. எந்த மனிதனுக்கும் ஒளி தருகிற அந்த மெய்யான ஒளியே உலகத்துக்குள் வந்தார்!'' என்பதே.

உலகின் ஒளியாகிய இயேசுபெருமானின் சிறப்பைச் சிலுவையில் காண்கிறோம். அங்கு, அன்பு பிழம்பாய் ஒளிர்கின்றது. உலகின் தீய சக்திகள் அனைத்தும் திரண்டெழுந்து அந்த ஒளியை அசைக்க முயன்றன. மரணமாகிய கொடிய நஞ்சு கலந்த இருட்குழம்பை, அந்த ஒளியின் மீது ஊற்றி அணைத்துவிடப் பார்த்தது. ஆனால் நடந்தது என்ன? மரணத்தின் கூர் ஒடிந்தது - மரணம் மேற்கொள்ளப்பட்டது. உண்மை இயேசு பிரான், பேரொளியாய் எழுந்து - 'இதோ எப்போதும் நான் உங்களுடனேயே இருக்கிறேன்!' என்றார்.

எனவே இன்று பல பிரச்சினைகள்-நடுவில் தத்தளித்துக் கொண்டிருக்கும் நமக்கு முழுமுதற் பேரொளியாம் அந்த உண்மை அன்பொளி இருள் சூழ்ந்த நிலைமையிலும் இருக்கின்றது. இந்த ஒளியை ஏற்போரின் உள்ளத்தில், குடும்பங்களில், சமூகத்தில், சபைகளில் இருள் அகற்றப்படுமென்பது நிச்சயம்.

உலகின் ஒளியாம் இயேசுவின் ஒளியைப் பெற்று ஒளிர்வோம் வாருங்கள்.

வண.எஸ்.கே.கதிர்காமர்,
குருமுதல்வர், மெதடிஸ்த திருச்சபை, யாழ்.பிராந்தியம்.

## மீண்டும் இறைமகன் இயேசு வருவார்



மீண்டும்
இறைமகன் இயேசு வருவார்
உலகை இரட்சிக்க
நிறைவேறும் காலம் வரும்வரை
காத்திருப்போம் அவருக்காக
குறைகள் எல்லாம் நீக்கிக்
குவலயம் சிறந்தோங்க
இறைமகன் இயேசு வருவார்
இறைமக்கள் ஆகும் வழியை
எமக்குக் காட்ட
இறைமகன் இயேசு வருவார்
ஏழைகள் பாவிகளை இரட்சிக்க
மறைநூல் பைபிளை நம்புங்கள்
மானிடம் வாழச் செய்யுங்கள்.

- வ.யோகானந்தசிவம்.

## கடவுள் நம்மோடு இருக்கிறார்



உலகை படைத்த இறைவன் மனுவுருவானார். நம்மிடையே வாழ்ந்தார். இறைவார்த்தைக்கூடாக நமக்கு கொடுக்கப்படும் செய்தி இதுவே.

இன்று உலகிலே காணப்படும் அனேக பிரச்சினைகள், குழப்பங்கள், யுத்தங்கள் போன்றவை ஒரு மனிதனை அல்லது ஒரு சமூகத்தை இன்னொரு மனிதனாலோ அல்லது இன்னொரு சமூகத்தினாலோ புரிந்து கொள்ளவோ, அறிந்துகொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியாதுள்ளதாகும்.

இறைவன் தன்னை வெறுத்த, தனது அன்பைப் புறக்கணித்த, தனது வழிகளை விட்டு தூரமாக விலகியோடிய மனிதனைத்தேடி, மனுவுருவேற்று பூவுலகில் வந்துதித்தார்.

மனிதனை புரிந்துகொண்டவராக, அவனது பலவீனங்களை ஏற்றுக் கொண்டவராக, முழுமையான அன்பை மனிதன் மேல் செலுத்தினவராக மனிதசாயலானார்.

மனிதனை அவனது அழிவிலிருந்து மீட்கும் பொருட்டு தன் மீட்பின் திட்டத்திலிருந்து சற்றேனும் விலகாதவராக, தன் வாழ்வையே மனுக்குலத்துக்காய் அர்ப்பணித்தார்.

இன் று போரினாலும், பசியினாலும், நோயினாலும் அழிந்து கொண்டிருக்கும் மனுக்குலத்தை மீட்க எடுக்கப்படும் சகல முயற்சிகளிலும் முழுமையாக நம்மை அர்ப்பணிக்க கிறிஸ்துவின் பிறப்பு எமக்கு அழைப்பு விடுக்கிறது.

கடவுள் நம்மோடிருக்கிறார் என்ற வாக்கு இன்று எமக்கு விடுக்கப்படும் அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள புதிய ஆவியை தந்தருளட்டும்.

இறைமகன் கிறிஸ்துவின் ஆசி யாவர் மேலும் இருப்பதாக.

வண.செ.பி.நேசகுமார்.
யாழ்.குருமுதல்வர், இலங்கைத்திருச்சபை.

## அன்று பலஸ்தீனம் இருந்த அதேநிலையில் இன்று யாழ்ப்பாணம் இருக்கிறது



ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயேசுபிரான் பலஸ்தீனத்திலுள்ள பெத்தலகேமில் அவதரித்தார்.

யாழ்ப்பாணம் இன்றிருக்கும் நிலையிலேதான் அன்று பலஸ்தீனம் இருந்தது. ரோமரின் கொடுங்கோல் ஆட்சி. ஆனால் அவர்கள் தம்மாட்சியை ரோமர் கொடுத்த சமாதானம் (PAX ROMANA) என்று கூறிக் கொண்டனர். அந்த சமாதானத்தை நிலைநாட்ட நிறைமாதக் கர்ப்பிணிகள்கூட குடிசனமதிப்பு எடுப்பதற்காக ஊரை விட்டு ஊர் செல்ல வேண்டியிருந்தது. ஏனெனில் பேரரசன் அகஸ்து சீசர் வரி ஏய்ப்பு பற்றிக் கவலைப்பட்டான். இரண்டு வயதுக்குட்பட்ட ஆண்குழந்தைகள் வெட்டிக் கொல்லப்பட்டனர். ஏனெனில் ஏரோது என்ற மாநில மன்னன் இன்சோடு அரசன் தோன்றி ரோமர் அளித்த சமாதானத்திற்குக் குந்தகம் ஏற்படுத்தி விடுவான் என்று பயந்தான். இவையெல்லாம் அன்றைய சமாதானத்திற்கு - பயங்கர மயான அமைதிக்கு அவசியமாகப்பட்டது.

ரோமருக்கு கீழ் அடிமைகளாகவிருந்த யூதரும் பல்வேறு கட்சிகளாகப் பிரித்திருந்தனர். எசனேயர் நாட்டை விட்டு ஓடினர். பரிசேயர் சாத்வீகமாக எதிர்த்தனர். செலோத்தேயர் ஆயுதம் ஏந்தி ரோமர் ஆட்சிக்கு எதிராகப் போரிட்டனர். சதுசேயர் ரோமரோடு ஒத்துழைத்தால் என்ன? என்று கேட்டனர். மரியாள், அன்னாள், சீமோன் ஆகியோர் இஸ்ரவேலின் ஆறுதலுக்காக ஊக்கமாக ஜெபித்து வந்தனர்.

இறைவன் குழந்தையாக பெத்லகேமில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்.
அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் வடித்த மக்களைப் பார்த்து,

வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே
நீங்கள் எல்லோரும் என்னிடத்தில்
வாருங்கள் நான் உங்களுக்கு
இளைப்பாறுதல் தருவேன்.

என் நுகம் எளிதானது; என்
நுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்

என்றார்.

இயேசு பிரான் அளித்த சமாதானம்
நம்மனைவரோடும் கூட இருப்பதாக.

வண. கலாநிதி எஸ்.ஜெபநேசன்.



## விரைந்திங்கு வாராயோ பாலகா!

பாலகனே பாரீரோ
பாருலகின் நிலைதன்னை
பரமனின் பிள்ளைகள் நாம்
பரிதவித்தே கலங்குகின்றோம்

அன்பின்றி அமைதியின்றி அலைகின்றோம்
வன்முறைகள் சொந்தமென்று வாழ்கின்றோம்
உண்மையான விடுதலை எப்போ
உன் பதில் எமக்குக் கூறாயோ?

போரும் பட்டினியும் பெருகிடவே
வாழும் உயிர்கள் நாளும் அழிகிறதே
நமக்கு எப்போ நீதியென நலிகின்றோம்
நீதியின் வேந்தனே நின்பதில் தாராயோ?

அடிமைப்படுத்தல்களும் ஆள்கடத்தல்களும்
அன்றாடம் எம்மைச் சூழ்கிறதே
அச்சத்தில் அமிழ்ந்தியே கதறுகின்றோம்
ஆறுதலின் அண்ணலே அமைதி நீ தாராயோ?

அரசியல், பொருளாதாரம் வேதனையாகிட
வாழும் உரிமையை எதிர்பார்த்து நின்று
கரமதில் கண்ணீரையே பருகுகின்றோம்
கருணையின் சீலனே காரிருள் களையாயோ.

ஐ.ஏ.ரி.றாஜன்.



## அமைதி கொண்டு வருக!

அமலியில் உருவான அற்புதமே வருக
அவனியில் அமைதியை ஏற்படுத்த வருக

வானவர் விண்ணதிர்ந்து வாழ்த்தவே வருக
கானமாய் சத்திய கீர்த்தனைகள் பொழிக

அஞ்சலி செய்திட இடையர்கள் வருக
பஞ்சணை யிலா பரமன் தாழ் பணிக

சாகித்யம் புகழும் சரித்திரமே வருக
நாதியற்று அலையும் நம்மவர் துயர் களைக

மஞ்சரிப் பூக்கள் தந்து மலரடி பணிந்தோம்
சஞ்சலங்கள் தீர்த்திட சரணடைந்தோம் உம்மை.

- கவிதா ஜெயப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் நத்தார் சிறப்பு மலர்-2007

PC PARK (PVT) LTD
the path to computer paradigm
கணனி உலகில் தரமான அதிஉயர் தொழில்நுட்பம் வாய்ந்த
கணனிகளை நியாயமான விலையில்
யாழ் மக்களுக்கு வழங்கி வரும்
PC Park ஸ்தாபனத்தினர்
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
நத்தார்தின வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றார்கள்.
MERRY CHRISTMAS
# 633, K.K.S Road, Jaffna.
Telephone: 021 2229581 Fax: 021 2229581 hotline: 0773068998
email: info@pcparkonline.com web: www.pcparkonline.com
(சி/54905)

# ஏக்கத்துடன் உதயமாகும் நத்தார்ப் பெருவிழா

மனிதர்கள் ஒவ்வொருவரும் வரலாற்றின் கட்டுக்குள் சிக்கி இழுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். வாழ்வில் சொல்லெணாத் துன்பங்களையும்ஏக்கங்களையும்சுமந்தவர்களாக நடமாடுகிறார்கள். அந்தவகையில் வரலாற்றின் புதியதொரு அத்தியாயத்தை திறப்பதற்கு - இன்னுமொரு புதிய ஆண்டிற்கு புதுக்கனவுகளோடு நுழைவதற்கு முழு உலகுமே தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறது.

ஆனால், போரின் எச்சங்களுடன் புது விடியலைத் தேடி நிற்கும் எமது தேசத்தில் கருச்சிதைவுகளாகிப் போன எம்மவர்களின் காத்திருப்பு வரிசையில் பிறக்கப்போகும் பாலன் யேசு மூலம் விடியல் கிடைக்குமோ என ஒரு விடியலின் காத்திருப்பு.

தொடர்ந்த இடப்பெயர்வுகளால் மனங்களும் உணர்வுகளும் வடுக்களாகிப் போனதுடன், இனியும் அது தொடருமா? என ஏக்கப்பார்வைகளுடன் பிறக்கப்போகும் பாலன் யேசுவை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் எம்மவர்கள்.

வாழ்க்கையின் துன்பியல் பக்கங்களைப் பார்த்துப் பார்த்து வெறுத்துப் போன எம்மக்களுக்குக் கிறிஸ்துவின் பிறப்புச் செய்தி எதைத் தாங்கி வருகின்றது? என்ற ஏக்கம் பெருமளவிலேயே உள்ளன.

'சுமை சுமந்து சோர்ந்திருப்போரை என்னிடம் எல்லோரும் வாருங்கள்' என்ற அழைப்புவிடும் குழந்தை யேசுவின் பிறப்புடன் எமது வாழ்விலும் நம்பிக்கை ஒளிஏற்றப்படும். ஆனந்தத்துடன் குழந்தை யேசுவை வரவேற்போம். ✱

- அடைக்கலன்.

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது இனிய நத்தார், புதுவருட நல்வாழ்த்துகள்
நவநாகரிக நங்கையர் விரும்பும் நவீன
ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்:
லைடன் புடவை நிலையம்
பஸ்நிலையம் முன்பாக,
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.222 2381
(சி/54901)

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய கிறிஸ்மஸ்
நல்வாழ்த்துகள்
✱ சகல விதமான புத்தகங்கள், இதர உள்வீட்டுப் பொருள்கள்.
✱ அலுவலக உபகரணங்கள், மாணவர்கள் பயன்படுத்தும் பொருள்கள்.
உங்கள் தேவை எதுவாயினும் பெற்றுக் கொள்ள...
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
இல.212,214, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சி/54909)

இன்ப ஒளி வீசிவரும் நத்தார் திருநாளில்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும், நல்வாழ்த்துகளை வழங்கும்
LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
BRANCH - 94 (6) Stanley Road, Jaffna. T.P.021 222 2353
141, Power House Rord, Jaffna. Tel: 021 222 5766 Fax: 021 222 8378

All versions of Genuine Intel Mother Boards, HT Processors, Dual Core, Core 2 Duo & Quad Core Processors
XMAS
SDRAMs
DDR1 RAMS
DDR2 RAMS
All Kinds of Mother Boards like PGA Socket, LGA Socket
சகல கணினி உதிரிகளும் வாரண்டியுடன்
Maxtor, Hitachi & Samsung Hard disks with 40, 80, 160, 250, 320 & 500 Gb's with SATA & PATA
HAPPY
Free
2 Gb Flash
Scanner/Printer/
TV Capture/TV Tuner/
UPS
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கணினியுடனும்
UNIT மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
✆ 4590720, 0773134737
(சி/54903)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் நத்தார் சிறப்பு மலர்-2007

# மண்ணில் பிறந்திட வாரும்!

மீண்டும் ஒருமுறை மண்ணில் பிறந்திட
தேவ மகனே வாரும்.
மேவும் உதிரப் புனலி லாடும்
மனித குலத்தினைப் பாரும்.
கூண்டுக்கிளிகள் நெஞ்சம் குமுறும்
ராக கீதங்கள் கேளும்.
கள்ளம் கபடம் எல்லையில்லாது பெருகி
கொடுமை நீளுதே நாளும்.

மேய்ப்ப னில்லா ஆட்டு மந்தைகள்
வேறு வேறாய்ப் போகும்.
மேலும் மேலும் வேட்டை யாடுவோர்
விருந்தின் பலிகள் ஆகும்.
சாய்த் தவற்றின் தாகந் தீர்க்கும்
சாந்தி பொழியும் நீயே!
சாவை வென்று வாழ்வைக் காட்டும்
சந்நிதி யுன் தாளே!

பூத்த கமலப் புன் சிரிப்பைக்
காட்டிக் கைகள் அசைக்கும்.
புனித மேரி அன்னை மடியில்
பொலிந்து கிடந்து தவளும்.

காத்தருளும் கடமை யாலே
கர்த்தருக்குள் நிற்கும்.
காசி னியை வாழச் செய்யும்
மேசி யாவே யாகி
வருத்த முறுவோர் இளைப்பைப் பெறவே
வாரும் என்று அழைக்கும்.
வாஞ்சையோடு வார்த்தை தந்து
வாதை நீக்கி யுதவும்.
உடுத்த சினத்தைக் கடிந்து மண்ணில்
உண்மை நன்மை விளக்கும்.
உலகம் உய்யத் தன்னைக் கொடுத்து
உயிர்ப்பின் மகிமை யுணர்த்தி

அன்பு மடங்கி அறனு மொடுங்கி
ஆசை நஞ்சை யுண்ணும்.
என்பு முருகும் வண்ணம் செய்யும்
ஈனம் எல்லை மீறும்.
முன்பு செய்த பழியின் பாவ
மூடை தன்னைச் சுமக்கும்.
வன் புடைய வையந் தன்னை
மாற்றும், பாலனாகி நீ யேசு!

**கலாநிதி.செ.திருநாவுக்கரசு.**

# நல்லொளி பகரும் பாலகன்

உழவனின் வியர்வையால் உழுநிலம் விளைந்து
உன்னத உணவாக நெல்மணி தருமே
மெழுகொளி போல்விடி வெள்ளியும் ஒளிர
மாண்புறு மேய்ப்பனும் வைக்கோலில் பிறந்தார்
விழுகின்ற பனித்துளி வையகம் குளிர
வந்துமே உதித்தார் எம்மனம் மகிழ
எழுகின்ற பொழுது எம்மிருள் கலைத்து
இறைமகன் அருளினால் நல்வழி பிறக்குமே.

**அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா**


'கர்த்தரே தெய்வம்'

துன்பங்கள் நீங்கி இன்பமாக வாழ
எமது நத்தார் வாழ்த்துக்கள்

**மேசியா நகை மாடம்**

**தங்க நகை வியாபாரம்**

237, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



இனிய நத்தார் நல் வாழ்த்துக்கள்

**நியூ அசோகா அலுமினியம் பிற்றிங் சென்ரர்**

மயிலனி வடக்கு, சுன்னாகம்.

உரிமையாளர் : சி.சுதர்சன்

தொ.பே : 0773609034

தொழிலகம்:
மயிலணி வடக்கு,
சுன்னாகம்.
தொ.பே : 0777 177220
077 3611229

சகல விதமான அலுமினியக் கதவுகள், மேசைகள், ஜன்னல்கள் என்பன
வடிவமைத்துப் பெற்றுக் கொள்வதற்கும் நவீன முறையில்
அலுவலகங்கள் மற்றும் தொழிலகங்கள் என்பவற்றை
அலுமினியம் பிற்றிங் செய்து கொள்வதற்கும்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.



நலம் தரும் நன்நாளில் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

**நீங்கள் ஏன் எமது வாடிக்கையாளர் ஆகக்கூடாது?**

**இதோ எங்கள் உறுதித் தன்மைக்கான**

**சான்றுகள்!**

BOC

**இலங்கையின் முதற்தர வங்கி**
**(No.01 வங்கி)**

01. வங்கியாளர்களைத் தரப்படுத்தலில் அதியுயர் மதிப்பீடு பெற்ற வங்கி
02. ரூ.400 பில்லியனுக்கு மேற்பட்ட மிகப்பெரிய சொத்துத்தளம் (40,000 கோடி ரூபாய்கள்)
03. ஒப்பீட்டு ரீதியில் உள்நாட்டு வங்கிகளிடையே அதிகூடிய தொகையான ரூ.18 பில்லியன் கொண்ட முதலீட்டு அடித்தளம்
04. ரூ.7.3 பில்லியன் வரையான உயர்ந்த தனிநபர் கடன் வசதி
05. 62 லட்சத்துக்கு அதிகமான வாடிக்கையாளரை கொண்ட வங்கி
06. 500இற்கு அதிகமான சேவை நிலையங்களில் ஒன்றிணைக்கப்பட்ட பாரிய வங்கிச் சேவை.
07. 50%இற்கு அதிகமான பங்குகளைத் தன்னகத்தே கொண்டு திறைசேரியின் வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கலில் தலைமை வகிக்கும் வங்கி.
08. கடல் கடந்த வங்கிச் சேவையில் 38% இற்கும் அதிகமான சந்தைப் பங்கைக் கொண்ட வங்கி.
09. இலங்கையின் நிதி வர்த்தகத்தில் 33% இற்கும் அதிகமான சந்தைப் பங்கு.
10. வெளிநாட்டு பண அனுப்புகையில் 58%இற்கு அதிகமான பங்கினை உள்வாங்கும் வங்கி
11. இலங்கையில் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் 32% இனைத் தன்னகத்தே கொண்டது.
12. ரூ.230 பில்லியனுக்கு (23,000 கோடி ரூபா) அதிகமான கடன்களை வாடிக்கையாளருக்கு வழங்கியுள்ள வங்கி
13. 550 இற்கு அதிகமான வெளிநாட்டு முகவர்களுடன் உலகளாவிய வலைப்பின்னல் உள்ள வங்கி
14. லண்டனில் கிளையைக் கொண்டுள்ள ஒரேயொரு சுதேச வங்கி
15. சர்வதேச நிதி நிறுவனங்களின் கணக்கியல் தரப்படுத்தலில் AA (LKA) எனும் உயரிய ஸ்தானத்தைக் கொண்ட முதன்மைச் சுதேச வங்கி

**இன்றே எமது வாடிக்கையாளராகிப் பயனடையுங்கள்**

வங்கியின் மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறைக் கிளைகளும் நாடாளாவிய வலைப்பின்னலுடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளன.



**எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணி நேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் மற்றும் உள்ளூர், வெளியூர் தொலைத் தொடர்பு வசதிகள், லெமனேற்றிங், பிறின்ரிங், கிறபிக்ஸ் டிசைனிங், கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

Net 2 Phone Doller
Call 2 Cents Doller
Call Speak Doller

Processor
Fan
Memory
VGA Card
Mother Board

WESTERN UNION

FedEx Express

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்.

லண்டனுக்கு அனுப்பப்படும் 5 கி.கி. பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்

யாழ்.குடாநாட்டிலிருந்து உலகின் எப்பாகத்திற்கும் கடிதங்கள் மற்றும் பொதிகளை மிக விரைவாக அனுப்பிட

நத்தார் புதுவருட விசேட சலுகைகள் எமது கிளையில்
வெளிநாட்டுக்கான தொலைபேசி அழைப்பு - ரூ.5/=
இந்தியாவுக்கான தொலைபேசி அழைப்பு - ரூ.10/=

Calling Card 3/=

சகல விதமான கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் கணனிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
[25/12 தொடக்கம் 2/01/2008 வரை விசேட சலுகை].

சகல விதமான
SLT MAXtalk
SLT NetCard

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 7835

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
☎ 021 222 7310
(நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னராட்சியை ஒழிக்க நேபாள அரசு இணக்கம்

## மீண்டும் அரசில் இணைகின்றனர் மாவோயிஸ்ட்டுக்கள்

காத்மண்டு, டிச.25

நேபாள அரசு, மன்னராட்சியை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவர இணக்கம் தெரிவித்துள்ளது. மாவோ போராளிகளின் கோரிக்கைகளை ஏற்று அவர்களை இடைக்கால நிர்வாகத்தில் மீண்டும் இணையச் செய்வதற்காகவே நேபாள அரசு இதற்கு இணங்கியுள்ளது.

நேபாளத்தில் அடுத்த வருடம் பொதுத் தேர்தல் நடைபெற்று அரசமைப்பு சபை உருவாக்கப்பட்ட பின்னர் அந்த நாடு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்படும்.

கடந்த செப்டெம்பரில் அரசிலிருந்து வெளியேறிய மாவோ அமைப்பு முடியாட்சியை உடனடியாக முடிவிற்குக் கொண்டு வருமாறு கோரியது.

நேபாளத்தின் முக்கிய கட்சிகள் மற்றும் மாவோ போராளி அமைப்புகளின் இடையே நேற்றுமுன்தினம் ஏற்பட்ட உடன்பாட்டின்

நேபாள மன்னர்



படியே மன்னராட்சியை முடிவிற்கு கொண்டு வருவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், மாவோ அமைப்பினர் மீண்டும் எப்போது அரசில் இணைவார்கள் என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

நேபாளம் எதிர்காலத்தில் சமஷ்டி ஜனநாயக குடியரசாக விளங்கும். அரசமைப்பு சபையின் முதலாவது கூட்டத் தொடரின் பின்னர் இந்த முடிவு நடைமுறைப்படுத்தப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நாடாளுமன்றத் தேர்தல்கள் ஏப்ரலில் இடம்பெறவுள்ளன. நேபாள வரலாற்றில் இதுவொரு மைல்கல் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முடியாட்சி அகற்றப்பட்டாலொழிய அரசில் மீண்டும் இணையப்போவதில்லை என மாவோயிஸ்ட்டுகள் எச்சரித்திருந்தனர்.

மாவோ போராளிகள் தாங்கள் விரும்பியதை அடைந்துள்ளதையடுத்து அவர்களது ஆதரவாளர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். நேபாளம் குடியரசாக விளங்குவது தங்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்றது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

உலக அரங்கில்

# இனி விமானத்திலும் இணையத்தள வசதி

சிகாகோ, டிச.25

நீண்ட தூரப் பயணிகள் விமானங்களில் இணையத்தள வசதி ஏற்படுத்துவதில் பன்னாட்டு விமான நிறுவனங்கள் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அடுத்த ஆண்டில் 15 'அமெரிக்கன் எயர்லைன்ஸ்' விமானங்களில் இது அறிமுகம் ஆகவுள்ளது.

விமானத்தில் புதுப்புது வசதிகளை அளிக்க நிறுவனங்கள் ஆர்வம்கொண்டுள்ளன. இருக்கை வசதிகளும் படுக்கையாக சாயும் அளவுக்கு அமைக்கின்றன. இப்போது பல ஆயிரம் அடி உயரத்தில் பறந்தபடி இணையத்தளம் பார்க்கும் வசதியையும் ஏற்படுத்த உள்ளன.

இதுபற்றி அமெரிக்க நகரான சிகாகோவில் பயண நிறுவன அதிகாரி கூறுகையில்,

''விமான நிறுவனங்கள் பயணிகளுக்கு கூடுதல் வசதி அளிப்பதுடன் புதிய வருவாயைப் பெற விரும்புகின்றன. அமெரிக்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தனது 15 விமானங்களில் முதல் கட்டமாக இணையத்தள வசதியை அறிமுகம் செய்கிறது'' என்றார்.

கண்டம் விட்டு கண்டம் பறக்கும் நீண்ட தூர விமானங்களில் 'பிராட்பேண்ட்' அலைவரிசையைப் பயன்படுத்தி இணையத்தள வசதி ஏற்படுத்தப்படும். விமானத்தில் இணையத்தளத்தைப் பயன்படுத்த கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். இதன் மூலம் வர்த்தகர்கள் பல மணி நேர பயணத்துக்கு இடையே தங்கள் பணியை தடங்கலின்றித் தொடருவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் பனிப்புயலால் 11 பேர் மரணம்

நியூயோர்க், டிசெ.25

மத்திய அமெரிக்காவில் கடும் பனிப்புயல் வீசி வருகிறது. பனிப்புயல் மற்றும் அதனால் ஏற்பட்ட வீதி விபத்துக்களில் 11 பேர் பலியானார்கள்; பலர் காயமடைந்துள்ளனர்.

மினசொடா பகுதியில் பனிப்புயலால் எதிரில் வந்த வாகனங்கள் கண்ணுக்கு தெரியாத நிலை ஏற்பட்டது. இதனால் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் 6 பேர் பலியானார்கள்.

டெக்ஸாஸ் மாகாணத்தில் இதே போன்ற விபத்துக்கள் ஏற்பட்டன. இதில் மூவர் உயிரிழந்தனர். காயமடைந்த 18 பேர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 2 பேரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. பல இடங்கில் பனிப்புயல் காரணமாக சாலைகளில் வாகனங்கள் செல்லமுடியாமல் சிக்கியுள்ளன. வடகிழக்கு கன்சாஸ் பகுதியில் பனிப்புயலால் ஒருவர் பலியானார்.

# உலக அமைதியை வலியுறுத்தி 3 தமிழர்கள் சைக்கிள் பயணம்

## மலேஷியாவில் ஆரம்பித்தனர்

கோலாலம்பூர், டிச. 25

உலக அமைதியை வலியுறுத்தி தமிழர்கள் மூவர் சைக்கிள் பயணத்தை கோலாம்பூரில் நேற்றுமுன்தினம் தொடங்கினர். கிழக்கு ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவில் அவர்கள் சைக்கிள் மூலம் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளனர். செண்பக வைரவாஞ்சி வளமாறவழுதி (வயது -48) அவரது உறவினர்கள் கே.சுரேந்திரன் (வயது -42), ராஜேஷ்குமார் (வயது -22) ஆகியோர் இந்த அமைதிப் பயணத்தை மேற்கொள்கின்றனர். இவர்கள் மூவருமே சென்னையைச் சேர்ந்தவர்கள்.

தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவில் சைக்கிள் மூலம் பயணம் மேற்கொள்ளும் அவர்கள் தங்கள் பயணத்தை 3 மாதங்களில் வெற்றிகரமாக நிறைவு செய்வோம் எனக் கூறியுள்ளனர். இவர்களில் வைர வாஞ்சி முன்னதாக பலமுறை சைக்கிளில் தனியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 28 அல் - குவைதாவினர் சவூதி அரேபியாவில் கைது

ரியாத், டிசெ.25

சவூதி அரேபியாவில் உள்ள மெக்கா, மதீனா, ரியாத் ஆகிய நகரங்களில் பதுங்கி இருந்த அல் - குவைதா தீவிரவாதிகள் 28 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அந்நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது. அவர்கள் கிரிமினல் செயல்களில் ஈடுபடுவதற்கு சதித்திட்டம் தீட்டினர் என்று இராணுவம் தெரிவித்தது.

கைதானவர்களில் ஒருவர் அன்னிய நாட்டைச் சேர்ந்தவர் ஆவார். இதற்கு மேல் வேறு எதையும் தற்போதைக்குக் கூற முடியாது என்று அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

### ருவென்ரி/20 போட்டி

# பங்களாதேஷிடம் வீழ்ந்தது நியூஸி.

நியூஸிலாந்து அணிக்கெதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ருவென்ரி/20 போட்டியில் பங்களாதேஷ் அணி 4 விக்கெட்டுகளால் அபார வெற்றியைப் பதிவுசெய்தது. பந்துவீச்சில் சஹரட் ஹொசைனும், துடுப்பாட்டத்தில் பர்கட் ரீசாவும் அணியின் வெற்றிக்குப் பக்கபலமாகவிருந்தனர்.

நியூஸிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள பங்களாதேஷ் அணி 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் ஆகியவற்றில் விளையாடவுள்ளது. முதல் ஒருநாள் போட்டி நாளை ஒக்லண்ட்டில் ஆரம்பமாகின்றது. முன்னதாக நேற்றுமுன்தினம் இரு அணிகளுக்குமிடையில் ருவென்ரி/20 போட்டியொன்று நடைபெற்றது. பங்களாதேஷில் அண்மையில் வீசிய சூறாவளியால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி திரட்டுவதற்காக இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணியால் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 133 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. பங்களாதேஷின் ஆரம்பப் பந்துவீச்சாளரான சஹரட் ஹொசைன் சிறப்பாகப் பந்துவீசி நியூஸிலாந்தின் ஓட்டக்குவிப்பைக் கட்டுப்படுத்தினார். தனது 4 ஓவர்களிலும் 15 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை அவர் வீழ்த்தினார்.

இலக்கைக் கலைத்த பங்களாதேஷ் அணி ஆரம்ப வீரர்களான ரமீம் இக்பால் (0), யூனியாட் சித்திக் (4) ஆகியோரை விரைவாக இழந்தது. பின்னர் வந்த அப்ரப் அஹமட் (20), மொகமட் அஸ்ரபுல் (20), சகிப் அல் ஹசன் (22) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க பங்களாதேஷ் அணி வெற்றி நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது.

6ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த பர்கட் ரீசா, மொர்ஹப் ஹொசைன் ஆகியோர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க நியூஸிலாந்தின் வெற்றி உறுதியானது. வெற்றிக்கு ஓர் ஓட்டம் தேவையான நிலையிலிருந்த போது பர்கட் ரீசா 31 ஓட்டங்களுடன் (17 பந்துகள், 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) ஆட்டமிழந்தார். 17ஆவது ஓவரின் முடிவில் பங்களாதேஷ் அணி வெற்றியைப் பதிவுசெய்தது.

# லாராவுக்கு பந்துவீசுவது கடினம்

## முரளிதரன் பேட்டி

சென்னை, டிச.25

தான் சந்தித்த துடுப்பாட்ட வீரர்களில் லாராவுக்கு பந்து வீசுவதே கடினமாக இருந்ததாக முரளிதரன் கூறியிருக்கிறார்.

தனது கிரிக்கெட் வாழ்க்கை குறித்து முரளிதரன் இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

''நான் பந்துவீசும்போது எனக்கு சவால் அளிக்கும் வகையில் இருந்தவர் மேற்கிந்தியத் தீவுகளின் பிரைன் லாரா. சச்சின் டெண்டுல்கரும் சிறந்த துடுப்பாட்ட வீரர்தான். ஆனால், சில சுற்றுப்பயணத்தின்போது அவர் காயமடைந்திருந்ததால் அவரை அதிகமாக நான் எதிர்கொள்ளவில்லை. வேகப்பந்து வீச்சாளர்களில் வசீம் அக்ரம் என்னை கவர்ந்தவர். சுழற்பந்து வீச்சாளர்களில் கும்ளே எனக்குப் பிடித்தமானவர். அவர் எனது நண்பரும் ஆவார். நான் கிரிக்கெட் வாழ்க்கையை தொடங்கிய காலக்கட்டத்தில் தான் கும்ளேயும் தொடங்கினார். இலங்கையில் ஜெயசூரியா, அரவிந்த டி சில்வா, சங்ககார ஆகியோரின் துடுப்பாட்டம் எனக்கு பிடிக்கும்.

''வோர்னின் சாதனையை சொந்த மண்ணில் முறியடிப்பதே விருப்பமாக இருந்தது. எனது பெற்றோர், மனைவி, நண்பர்கள், உறவினர்கள், சொந்த மக்கள் முன்னிலையில் சாதனை நிகழ்த்தியது மகிழ்ச்சி அளிக்கிறது. எனக்கு இயான் பொத்தம் மூலம் வோர்ன் வாழ்த்து தெரிவித்தார்.

''எல்லாவற்றுக்குமே ஒரு முடிவு உண்டு. இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகள் கிரிக்கெட்டில் இருப்பேன். அதன் பிறகு அடுத்த கட்ட முடிவு எடுப்பேன். அந்தக் காலக்கட்டத்தில் எத்தனை விக்கெட்டுகள் வீழ்த்த முடியும் என்று கணிக்க முடியாது. ஓய்வுக்குப் பிறகு பயிற்சி அக்கடமி தொடங்கும் எண்ணம் இல்லை. ஆனால், எனது நண்பர் கும்ளே தனியாக பயிற்சி மையம் தொடங்கி சுழற்பந்து வீச்சு பயிற்சி அளிக்கலாம் என்று எனக்கு யோசனை சொல்லியிருக்கிறார். எனவே தனியாக அமைப்பு தொடங்கி அந்தப் பணியில் ஈடுபடும் உத்தேசம் இருக்கிறது.

''எனது மகன் நரேன் எந்த துறையை தேர்ந்தெடுக்கிறானோ அவன் விருப்பப்படியே விட்டு விடுவோம். கிரிக்கெட் விளையாடு என்று கட்டாயப்படுத்த மாட்டோம். அவனது விருப்பம் எதுவோ அதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்.

''1998ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக ஓவலில் நடந்த டெஸ்டில் 16 விக்கெட்டுகளை வீழ்த்தியமை மறக்க முடியாதது. இதேபோல் 1996ஆம் ஆண்டு லாகூரில் நடந்த உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவை வென்று பட்டத்தை கைப்பற்றியது என்றும் மறக்கமுடியாத விடயமாகும். ஒரு தமிழன் என்று சொல்வதில் பெருமையாக இருக்கிறது. ஆனால், இதில் பிரித்து பார்க்க விரும்பவில்லை.

''கிரிக்கெட்டில் 20 ஓவருக்கு கீழ் குறைக்கப்பட்ட வாய்ப்பில்லை. எதிர்காலத்தில் ருவென்ரி/20 போட்டி, ஒருநாள் போட்டி, டெஸ்ட் போட்டி ஆகியவற்றுக்குத் தனித்தனியாக வீரர்கள் இருப்பார்கள் என்று நினைக்கின்றேன்.'' - இவ்வாறு முரளிதரன் கூறினார்.

விளையாட்டு அரங்குகளில்

# தொடக்க வீரராக டிராவிட்

மெல்போண், டிச.25

இந்திய அணியில் ஒருவார காலமாக நிலவி வந்த தொடக்க வீரர் குழப்பம் முடிவுக்கு வந்துள்ளது. மெல்போணில் நாளை தொடங்கும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட்டில் வசீம் ஜாபருடன், ராகுல் டிராவிட்டை தொடக்க ஆட்டக்காரராக இறக்குவது என்று அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதையடுத்து கடைசி பதினொருவர் அணியில் சிக்ஸர் மன்னன் யுவராஜ்சிங் இடம் பிடிக்கிறார்.

யுவராஜ்சிங் சமீபத்தில் பெங்களூரில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான இறுதி டெஸ்டில் அதிரடியாக விளையாடி சதம் அடித்தார். இருப்பினும் அவருக்கு ஆஸ்திரேலியத் டெஸ்ட் தொடரில் களமிறங்கும் அணியில் இடம் கிடைப்பதில் தொடர்ந்து நெருக்கடி இருந்து வந்தது. தொடக்க வீரர் இடத்துக்கு ஷேவாக் பெயரும் பரிசீலிக்கப்பட்டதால் கூடுதல் சிக்கல் ஏற்பட்டது. இந்த நிலையில் தொடக்க ஆட்டக்காரராக டிராவிட் ஆடுவதன் மூலம் யுவராஜ்சிங் களம் காண்பது நிச்சயமாகியுள்ளது. டிராவிட் தொடக்க வீரராக வருவதால் 3ஆவது விக்கெட்டுக்கு வி.வி.எஸ். லக்ஸ்மன் இறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வோர்ன், மெக்ராத் இல்லாவிட்டாலும் பலமான நிலையிலேயே ஆஸ்திரேலியா

## லக்ஸ்மன் தெரிவிப்பு

ஆஸ்திரேலிய அணியில் வோர்ன், மெக்ராத் ஓய்வுபெற்று விட்டாலும் அந்த அணி பந்துவீச்சில் வலுவாக இருப்பதாக இந்திய வீரர் லக்ஸ்மன் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் எப்போதுமே அசத்தக்கூடியவர் இந்தியாவின் வி.வி.எஸ்.லக்ஸ்மன். அவர் நேற்று மெல்போர்னில் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

''ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நாங்கள் எப்போதும் ஆக்ரோசமாக விளையாடி நன்றாகச் செயற்பட்டு வந்துள்ளோம். ஆஸ்திரேலியா உலகில் தலைச்சிறந்த அணியாகும். அவர்களுக்கு எதிராக ஆக்ரோசமான ஆட்டம் தொடரும். அவர்களுக்கு கொஞ்சம் இடம் கொடுத்தாலும் ஏறி மிதித்து விடுவார்கள்.

''ஆஸ்திரேலியாவில் விளையாடும் போது தன்னம்பிக்கை மிகவும் முக்கியமானதாகும். என்னை எப்படி வீழ்த்துவது என்பது தெரியவில்லை என்று பொண்டிங் கூறியிருக்கிறார். ஆனால், எனக்கு எதிராக குறிப்பிட்ட வியூகத்தை அவர்கள் வகுத்ததாக நான் பார்க்கவில்லை.'' - இவ்வாறு லக்ஸ்மன் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சமாதானத்தின் தேவன்

இன்று நத்தார் தினம். சமாதானத்தின் தேவன் அவதரித்த நந்நாள். உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் இன்றைய தினத்தைக் கொண்டாடுகிறார்கள். விடுதலையின்றித் தவிக்கும் மனுக்குலத்தின் ஆத்ம விடுதலைக்காகத் தம்மையே மரணத்துக்கு ஒப்புக் கொடுக்க வந்த கிறிஸ்து பிறந்த தினம்தான் இன்று.

சமாதானத்துக்காக - மானுட அமைதிக்காக - தன் சொல்லாலும், செயலாலும், ஜீவனாலும் நற்பணி புரிந்த எமது ஆண்டவர் அதற்காகவே தமது உயிரையும், உடலையும் கூட அர்ப்பணித்தார் என்பதே அவரது வாழ்வுகாட்டும் சிறப்பாகும்.

மேசியாவாகிய இயேசு பிறந்ததோர் ஒரு வறிய குடும்பத்திலேயே. அதுவும் அகஸ்து அரசனிட்ட அராஜகக் கட்டளைப்படி யோசேப் தனது மனைவியான மரியாளுடன் தனது பிறப்பிடத்துக்கு இடம்பெயர்ந்து தங்க இடமின்றி அங்கே அகதிகளாகி அலைய நேர்ந்தது. அந்தச் சூழ்நிலையிலேயே அவர் பிறந்தார்.

அவர் பிறந்த இடமோ இரவு தங்குவதற்கு இரவலாகக் கிடைத்த மாட்டுத் தொழுவம். இப்படியாக வறிய குடும்பத்தில் அகதியாக - நிர்ப்பந்த சூழலில் மாட்டுத் தொழுவத்தில் - பிறப்பதென்பது இன்றைய கணிப்பீட்டின் படி எவ்வகையிலும் மேன்மையான பிறப்பாக இருக்கமாட்டாது.

ஆனாலும் கூட அதைத்தான் விண் தூதர்கள் அதி உன்னத பிறப்பாகக் கருதினார்கள். அதைத்தான் அவர்கள் 'எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி' என்றார்கள்.

இயேசு மாட மாளிகையில் பிறக்கவில்லை. ஏழ்மையின் தோழமையில் எளிய இடையர்களோடு ஒன்றித்தார். அவர் படிப்பாளிகளையும், பட்டம் பெற்றவர்களையும், கல்விமான்களையும் தேடவில்லை. அவர் தேடியது பாவிகளை, நோயாளிகளை, உள்ளம் உடைந்தவர்களை, புறக்கணிக்கப்பட்டவர்களை. இயேசு மனித மாண்பை நிலைநாட்டவும், உண்மையை எடுத்துரைக்கவும், உள்ளங்களைப் புனிதப்படுத்தவும், தவறுகளைத் திருத்தவும், நேர்மையை நிலைநாட்டவும் பிறந்தார். இதற்காக அடிமையின் தன்மை பூண்டார். மனுக்குலத்தின் மீது அவர் கொண்டிருந்த தணியாத, அணையாத அன்பின் வெளிப்பாடுதான் அவரின் பிறப்பு. அந்த அன்பினை அவர் மனிதனாக வழங்க வந்த நிகழ்வே கிறிஸ்து பிறப்புவிழா. இது சமத்துவத்தின் விழா. மகிழ்ச்சியின் விழா. விடியலின் விழா. உள்ளதை இல்லாத ஏழை மக்களோடு - அயலவர்களோடு - பகிரும் விழா. உடைந்துபோன உள்ளங்களை ஒட்டவைக்கும் விழா. உள்ளத்திலும், இல்லத்திலும் குதூகலத்தை உருவாக்கும் விழா. இவை அனைத்திலும் நிறைவு காண்பதற்கென்றே மாபரன் இயேசு மனிதனானார்.

அவரின் பிறப்பையொட்டி "கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காக தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" என்று தேவதூதர்கள் அறிவித்தனர். "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" (லூக்கா2 : 14) என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள். இவர்களின் வார்த்தையை சிரமேற்கொண்டு செயற்பட்டனர் இடையர்கள்.

ஆனால், இன்று அந்த சமாதானம் பூமியில் இருக்கின்றதா? எமது நாட்டில் இருக்கிறதா? பூமியானது பாவத்தில் ஆழ்ந்துவிட்டது. இலங்கை, ஈராக், ஆப்கானிஸ்தான் உட்பட உலகின் பல நாடுகளில் சமாதானம் இன்னும் எட்டாத தூரத்தில் இருக்கிறது. இன்று மரணங்கள் மலிந்த பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் இலங்கை மக்கள். இயேசுவின் இந்தக் கிறிஸ்தோதயம் அந்த நெருக்கடிகளில் இருந்து தமக்கு விடிவையும், ஒளியையும் பெற்றுத்தராதா என்று ஆதங்கத்தோடு ஏங்குகின்றார்கள்.

இந்த ஆண்டைவிட எதிர்வரும் ஆண்டு மிகவும் மோசமான, அச்சம் தருகின்ற, பீதி ஏற்படுத்துகின்ற ஆண்டாக இருக்கப் போகிறது என்ற அங்கலாய்ப்புடன் இயேசுவின் பிறப்பை எதிர்கொள்கிறார்கள் மக்கள். எந்நேரமும் பெரும் யுத்தம் வெடிக்கலாம் என்ற பயம் ஒவ்வொருவரது மனதிலும் நெருடுகிறது. வடக்கிலும், கிழக்கிலும் லட்சக்கணக்கானோர் தமது சொந்த வீடுகளை இழந்து - அல்லது சொந்த வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு பல ஆண்டுகளாக அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் காலம் கழிக்கின்றனர். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. அப்பாவிப் பொதுமக்கள் கடத்திச் செல்லப்படும், கொலை செய்யப்படும் சம்பவங்கள் நீடிக்கின்றன. கைதுகளும் சித்திரவதைகளும் இடம்பெறுகின்றன. தினமும் இடம்பெறும் மோதல்களினால் பலர் உயிரிழக்கின்றனர். ஏராளமானோர் அங்கவீனமாகின்றனர். மரண ஓலங்களையே நாம் தினமும் கேட்கிறோம். இவற்றுக்கெல்லாம் காரணம் எம் மத்தியில் சமாதானம் இல்லாததுதான்.

இறைமகன் இயேசு காட்டிய சமாதான வழியில் மற்ற மனிதர்களையும், இனத்தையும் தம்மைப் போல் மாண்புடன் மதிக்கின்ற வகையில் செயற்படுகின்ற மேலான மனப்பாங்கும் மனப்பக்குவமும் எமது இலங்கைத் தீவின் தலைவர்களுக்கு வராத வரையில் தேவன் காட்டிய சமாதான வாழ்வு எமக்குக் கிட்டப்போவதில்லை.

இன்று இலங்கையில் சமாதானம் குறித்துப் பேசுவோர் தேசத் துரோகிகளாகப் பார்க்கப்படுகிறார்கள். யுத்தத்துக்கு குரல் கொடுப்போர் தேச பக்தர்களாகக் கருதப்படுகிறார்கள். இதனால் சமாதானச் சக்திகள் முடக்கப்பட்டுவிட்டன.

கிறிஸ்து பாவிகளுக்காக சிலுவையில் அறையுண்டு மரித்த பெரிய வெள்ளிக்கிழமை அன்று செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தம்தான் இன்று வட அயர்லாந்துப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டது. இதேபோன்ற ஓர் அற்புதம் ஏற்பட்டால் மாத்திரமே இலங்கைத் தீவைப் பேரழிவில் இருந்து காப்பாற்ற முடியும்.

"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்ற இறைமொழியை மனதில் கொள்வோமானால் இலங்கையில் யுத்தத்துக்கு முடிவு கண்டு சகல இன மக்களும் இன ஐக்கியத்துடன் வாழ முடியும்.

# சமாதானத்தை மீண்டும் மீண்டும் மக்களிடம் வலியுறுத்த வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் செய்தி



கொழும்பு, டிசெ.25

நத்தாரின் கருப்பொருள் மக்களிடத்தே செயல்வடிவம் பெறுவதற்கு அவர்களிடம் மீண்டும் மீண்டும் சமாதானத்தை வலியுறுத்தி நிற்போம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள நத்தார் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

கிறிஸ்மஸ், சமாதானத்தையே வலியுறுத்தி நிற்கின்றது. மனித சமூகத்தினரிடத்தே நல்லிணக்கம், விட்டுக்கொடுப்பு, அமைதி மற்றும் சிறந்த பண்புகள் மேலோங்குவதற்கும் சமாதானம் இன்றியமையாததாகும்.

முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு சமாதானத்தின் தேவையை வேண்டிநிற்கும் நிலைக்கு உலகம் இன்று தள்ளப்பட்டுள்ளது. எனினும் சமாதானம் நினைத்தளவில் விரைவாக எம்மை வந்து அடைந்துவிடாது.

கிறிஸ்தவ மக்களுக்கு சிறந்ததோர் நத்தாராக அமைவதற்கும் ஏனைய உலகுவாழ் மக்களுக்கு இந்த நத்தார் நற்செய்தி கிட்டுவதற்கும் சமாதானம் ஒன்றையே நாம் நிலைபெறச் செய்ய வேண்டும்.

எனவே, நத்தார் சிறப்பாக அமைவதற்கும் அதன் கருப்பொருள் மக்களிடத்தே ஏற்படுவதற்கும் உலக மக்களிடத்தே மீண்டும் மீண்டும் சமாதானத்தையே வலியுறுத்தி நிற்போம்.

நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் கிறிஸ்தவ மக்களுக்கும் உலகுவாழ் மக்களுக்கும் சமாதானமும் சகவாழ்வும் நிறைந்ததோர் நத்தாராக அமைய வாழ்த்துகின்றேன். - என்று உள்ளது.

## வேத ஆகமப் பரீட்சை குருகுலத்தில் இரு தினங்கள்

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றிய குருகுல மாணவர்களுக்கும் வெளிவாரி மாணவர்களுக்குமான வேத ஆகம பரீட்சைகள் எதிர்வரும் 29,30ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் ஒன்றியச் செயலகத்தில் நடைபெறவிருக்கின்றன.

இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள், குருமார்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் குருமார் ஒன்றிய அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## நெற்பயிர்கள் சரிந்து வீழ்கின்றன

வலி.தென்மேற்கு,டிசெ.25

அண்மையில் ஏற்பட்ட பெருமழை வெள்ளம் காரணமாக இப்பிரதேசத்திலுள்ள நெற்காணிகள் பலவற்றில் வளர்ச்சியடைந்த நெற்பயிர்கள் இலை மடங்கி நிலத்தில் சரிந்து விழுந்துள்ளன. நெற்கதிர்கள் வரும் பருவத்தில் இவ்வாறு சரிந்து விழுவதால் விளைச்சல் பாதிப்படையும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (அ-135)

# சமாதான தேசத்தை உருவாக்குவதற்கு மக்கள் துணிச்சலோடு முன்வரவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நத்தார் செய்தி



கொழும்பு, டிசெ.25

சமாதானமும் அமைதியும் அரசியல் உரிமையும் மக்களாகிய உங்களுக்கு உரியது. அதன் பெறுமதி உணர்ந்தவர்கள் நாங்கள். அகதிகளாக அலையும் இடம்பெயர்வுகளும் இன்னல்களும் இடுக்கண்களும் அச்சம் தரும் வாழ்வும் ஒழிந்து அமைதிப் பூங்காவில் வாழும் சமாதான தேசத்தை உருவாக்க மக்களாகிய நீங்கள் தொடர்ந்தும் துணிச்சலோடு முன்வரவேண்டும்.

அனைத்து இன, மத மக்களும் சமாதான தேசத்தில் சாந்தமாகவும் சம உரிமை பெற்றவர்களாகவும் வாழும் காலத்தை நாம் விரைவில் உருவாக்குவோம்.

இவ்வாறு தமது நத்தார் தின செய்தியில் தெரிவித்துள்ளார் சமூக சேவைகள் அமைச்சரும் ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா.

அவர் தனது நத்தார் தினச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது-

இன்றைய நாள் உலக சமாதானத்தின் ஒளி பிறந்த நாள்.

மனித குலத்தின் மீட்சிக்காக ஒளி பிறந்த இந்தப் பெருநாளை உலக மக்கள் யாவரும் மகிழ்ந்து கொண்டாடி வருகின்றனர். ஆனாலும் எமது தேசத்தில் மட்டும் இந்த மகத்தான தினத்தின் மகிழ்ச்சியை மக்களாகிய நீங்கள் அனுபவிக்க முடியாதவர்களாக இருண்ட சிறைக்குள் தொடர்ந்து இருக்க நிர்ப்பந்திக்கப்படுகிறீர்கள்.

கொடிய யுத்தமும் அதற்காக சிந்தப்படுகின்ற குருதியும் இனிய வாழ்வைக் கொண்டாடும் மகிழ்ச்சிக்குத் தொடர்ந்தும் தடையாக இருந்து வருகின்றது. இதனால் நீங்கள் வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறீர்கள். மனித உயிர்கள் மீதான நேசிப்பும், மனித உரிமைகள் மீதான விசுவாசமும் அற்றுப்போனவர்களாக சமாதானத்தின் எதிரிகள் மனித குலத்தின் மகிழ்ச்சிக்கு எதிரான கொடிய யுத்தத்தை மக்களாகிய உங்களின் பெயரால் தொடர்ந்தும் நடத்தியும் நடத்தத் தூண்டியும் வருகின்றனர்.

காணும் இடங்களெல்லாம் கல்வாரி மலைகளே காட்சி தருகின்றன. அங்கெல்லாம் சமாதானத்தை நேசிப்பவர்களும் மனித குலத்தை விசுவாசிப்பவர்களும் கல்லறைகளில் வைத்து மூடப்படுகின்றார்கள். ஆனாலும் சமாதானத்தின் வருகையை யாராலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது. எமது தேசத்தின் அமைதிக்காக நியாயத் தீர்ப்பெழுதும் காலத்தை உருவாக்கும் முயற்சிகளை யாராலும் சிதைத்துவிடமுடியாது.

**நீதி எங்கும் குடியிருக்கிறது**

வயல்வெளிகளிலும், கடல் அலைகளிலும், எமது கிராமங்களிலும் நகரங்களிலும் நீதி குடியிருக்கின்றது. ஒவ்வொரு மனிதர்களின் மனங்களிலும் நீதி தங்கி வாழ்கின்றது. நீதியின் செயல் சமாதானம், நீதியின் பலன், என்றும் உள்ள அமைதியும், அச்சமில்லாத வாழ்வும் ஆகும். எமது மக்களாகிய நீங்கள் சமாதானமாக இல்லங்களிலும், அச்சமற்ற வாழ்விடங்களிலும் தங்கிக் குடியிருக்கும் காலம் உருவாகும். இந்த நம்பிக்கை எமக்கு உண்டு. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பகல்நேர மின்வெட்டு தளர்த்தப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.25

குடாநாட்டில் கடந்த 21ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பகல் நேர மின்வெட்டு, நேற்றுமுதல் தளர்த்தப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வந்த மழை காரணமாக பகலில் மின் பாவனை அதிகரித்திருந்தது.

இதன்காரணமாக கடந்த 21ஆம் திகதி முதல் பகல் நேரத்தில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

இப்போது மழை பெய்யாததால் நேற்றுமுதல் தளர்த்தப்பட்டுள்ளதாக அரச அதிபர் அறிவித்துள்ளார். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 10 | புதன்கிழமை |
| | 26.12.2007 |
| திதி : திருதியை | பி.இ. 03.34 |
| நட்சத்திரம் | பூசம் |
| | பி.இ. 03.40 |
| சுபநேரம் | : 04.57 - 06.27 |
| ராகுகாலம் | : 12.27 - 01.57 |

# சமாதான வாழ்வு நிறைந்த நாளாகட்டும் நத்தார் விழா

## யாழ்.படைகளின் தளபதி செய்தி



யாழ்ப்பாணம்,டிசெ.25

நத்தாரின் பொழிவிலும் பக்தியிலும் பரவசமடைந்து மிளிரும் இன்றைய நாள் உங்கள் அனைவருக்கும் சமாதான வாழ்வு நிறைந்த நத்தார் தினமாக வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

யாழ்.பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி விடுத்துள்ள நத்தார் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இன்று உலகின் கோடிக்கணக்கான கத்தோலிக்க பக்தர்களுடன் யாழ். குடாநாட்டு கத்தோலிக்க மக்களும் மிகவும் பக்தியுடனும் கௌரவத்துடனும் கொண்டாடும் இயேசு பிரானின் பிறப்பான நத்தார் தினத்திலே யாழ். கத்தோலிக்க பக்தர்களுக்கு வாழ்த்துச் செய்தியை விடுக்க கிடைத்தமையானது நான் பெற்ற பாக்கியமாகக் கருதுகிறேன்.

கத்தோலிக்க பக்தர்கள், நத்தார் தினத்தை தமது உற்றார், உறவினர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் எவ்வித பாகுபாடுமின்றி உதவி செய்வதானது இந்நாளில் சகோதரத்துவத்தையும் சினேகிதத்தன்மையையும் வெளிப்படுத்தும் விசேட அம்சமாகும். கத்தோலிக்க பக்தர்களாகிய நீங்கள் குறுகிய சமூக அரசியல் நோக்கங்களில் இருந்தும் விலகி தமது அயலவர்களுடன் கூடி வாழ்வதானது உண்மையிலேயே போற்றத்தக்கதாகும்.

பக்தர்களான நீங்கள் தொன்றுதொட்டு இந்நாட்டில் அனைத்து சமூகங்களுடனும் சுக துக்கங்களைப் பகிர்ந்து ஒரே குடும்பமாக வாழ்ந்து வருகிறீர்கள். சிறந்த கத்தோலிக்க பக்தர்களான உங்களை உதாரணமாகக் கொண்டு இந்நாட்டில் அனைத்து சமூகங்களும் செயற்படுவார்களேயானால் தற்போது இந்நாட்டில் குடிகொண்டிருக்கும் விரோதப் போக்கான நிலை ஏற்பட்டிருக்காது என்பதுடன் அனைத்து இன மக்கள் மனங்களிலும் சமாதான எண்ணங்கள் நிலை கொண்டிருக்கும்.

வைராக்கியம் குரோதத் தன்மை கொண்ட சூழலில் வாழும் நீங்கள் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் பரவவிடும் மேன்மையான கத்தோலிக்க பக்தர்களாக வேண்டுமென்று இந்நத்தார் தினத்தில் திடசங்கற்பம் கொள்வீர்கள் என்று நம்புகின்றேன். - என்றுள்ளது. (அ-1)

# நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவப் படையினர் பிரார்த்தனை

## 51ஆவது பிரிவினர் நத்தார் செய்தி

யாழ்ப்பாணம்,டிசெ.25

யேசு பிரானின் அவதார தினத்தில் நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ பிரார்த்திக்கிறோம்.

நத்தார் தினத்தை ஒட்டி 51ஆவது படையணி பிரிவினர் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்களை ஒட்டி கிறிஸ்தவ மக்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

இந்தப் புனிதநாளில் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவேண்டும் என மக்களுடன் சேர்ந்து படையினரும் பிரார்த்திக்கின்றோம் - என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டவர் மீண்டும் நீதிமன்றப் பாதுகாப்பில்

யாழ்ப்பாணம்,டிசெ.25

...ரி அச்சுறுத்தல் காரணமாக சரண் ...து நீதிமன்ற பாதுகாப்பில் இருந்த ...பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டவர் மீண்டும் நேற்று நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப் பட்டார்.

நீதிமன்றப் பாதுகாப்பில் யாழ்.சிறைச் சாலையில் வைக்கப்பட்டிருந்தவர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் விசாரணைக்கு ஏற்கனவே பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தது தெரிந்ததே.

இது விடயம் யாழ். நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் நேற்று எடுக்கப் பட்டு, அவரின் உத்தரவின் பேரில் மீண்டும் யாழ்.சிறைச்சாலையில் தங்கவைக்கப் பட்டார்.

# அத்தியாவசிய பொருள்களுடன் இந்தியாவிலிருந்து கப்பல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

இந்தியாவில் இருந்து அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருள்களு... 'நிமல' என்ற கப்பல் இன்று காங்கேசன்துறைக்கு வருகின்...

...வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தனியார் வர்த்தகர்கள் இந் தப் பொருள்களை எடுத்துவருகின்றனர்.

பொருள் இறக்கும் பணிகள் உடன் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# இடம்பெயர்ந்தோருக்கான டிசெம்பர் மாத நிவாரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கான டிசெம்பர் மாத நிவாரணம் இந்த வாரம் தொடக்கம் வழங்கப்படும் என செயலக திட்டப் பணிப்பாளர் எம்.பிரதீபன் தெரிவித்தார்.

நிவாரண விநியோகத்தை அந்தந்த மாதத்தில் வழங்கி முடிக்கும் திட்டத்தில் ...மாத விநியோகம் இவ்வார இறுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

# மட்டக்களப்பில் வெள்ளத்தினால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைப்பட்டதான அல்லை கந்தளாய் வீதி யில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் நிலை யில் பயணிகள் போக்குவரத்துச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக மூதூருக்கோ அன்றி திருகோணமலைக்கோ பயணம் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை -

நாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழையினால் 10 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் மிகவும் கடுமை யாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்துக்கென 5 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கின்றது.

மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவா ரண சேவைகள் அமைச்சில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பதியுதீன் இந்தத் தகவல்களை அறிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்பட்டிருக்கும் வெள்ளப் பெருக்கால் பல மாவட்டங்களில் மக்கள் பாதிக்கப்படுகின் றார்கள். குறிப்பாக அம்பாறை, பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், பொலன்ன றுவை, இரத்தினபுரி, அநுராதபுரம், மாத்தளை, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

மொத்தமாக 2 லட்சத்து 9 ஆயிரம் மக்கள் இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அகதி முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இந்த மழையினால் சிலர் உயிரிழந்தும், சிலர் காயமடைந்தும், பலர் தமது உடைமைகளை இழந்தும் நிர்க்கதிக்குள்ளாகியிருக்கின்றனர்.

இவர்களுக்குத் தேவையான சமைத்த உணவுகளை வழங்க, நாம் அந்தந்த மாவட்ட அரச அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அத்துடன் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தை அகற்ற நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர் கள் விவசாய நிலங்கள் வைத்திருந்தால் அவர்களுக்கு விவசாய நடவடிக்கைகளுக்கு குரிய நஷ்டஈடு வழங்கப்படும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணத்துக்கென 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. -என்றார். (அ-1)


விசேட கருத்தரங்கு
A/L - 2008
மாதிரிப் பரீட்சை கருத்தரங்கு - 01
26.12.07 (புதன்)
by: வின்சன் (B.B.A.Spl)
கற்பகம் - யாழ்
ஐடியல் - மானிப்பாய்
விஸ்லைஸ் - கன்னாகம்
க ண க் கீ டு

A/L 2010
கலை, வர்த்தக, விஞ்ஞான புதிய வகுப்புக்களுக்குரிய அனுமதிகள் வழங்கப் படுகின்றன.
*A/L ஆங்கிலம் & G.I.T
*Gr. 1 முதல் O/L வரை
*English medium Gr. 6 to 11
* புலமைப்பரிசில் Gr 5 (மதிப்பீட்டுப்பரீட்சைகளுடன்)
SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.

IDM
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட தனித்துவமான கணனிக் கல்லூரி
O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு விசேட சலுகைக்கட்டணம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
இன்றே அருகில் உள்ள IDM கிளைகளை நாடுங்கள்.
(MS. OFFICE, DTP, HARDWARE, AUTOCAD, E-KIDS)
யாழ்ப்பாணம் - 216, நாவலர் வீதி.
மானிப்பாய் - முனமமலை லேன் (மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
நெல்லியடி - கொடிகாமம் வீதி. (பஸ் நிலையத்துக்கு அருகாமையில்)
Phone - 021 222 9901
Web: www.idm.org / www.idm.edu


# நத்தார் பண்டிகை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருணை... செய்தியானது இ... தில் நிம்மதியைத் தேடும் வறியோருக்கும் குறைந்த வசதிகளையுடையவர்களுக்கும் அர்த்தமுள்ளதாக இருப்பதோடு, அது உலகத்தின் அனைத்து மாந்தர்களுக்கும் கருணை காட்டுவதாக இருக்கும். ஆதலால் இயேசு நாதர் பிறந்த மாட்டுத்தொழுவ செய்தியானது பூரண அர்த்தத்தைப் பெற வேண்டுமாயின் நத்தார் பண்டிகை தாழ்ந்த மட்டத்திலுள்ள நபரிலுருந்து மிருகங்கள், பறவைகள் உள்ளிட்ட அனைத்து ஜீவராசிகளுக்கும் மனித அன்பு, கருணை பாராட்டுகின்ற பண்டிகைக்காலமாக இருத்தல் வேண்டும்.

சமாதானம் மற்றும் நல்லெண்ணம் கொண்ட இந்த சிறப்பான பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும் இது மகிழ்ச்சிகரமான, அமைதியான நத்தார் பண்டிகையொன்றாக இருக்க நான் வாழ்த்துகிறேன். - என்றுள்ளது. (அ-1) (அ-சி)

# தீ விபத்தில் எரிந்து வீடு நாசம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதி திருநகரில் நேற்று மாலை 6.30 மணியளவில் வீடு ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்து நாசமாகியது.

அந்த வீட்டில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டதாகவும் வீட்டில் இருந்த உடைமைகள் முழுமையாக எரிந்து சாம்பரானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் அங்கு விரைந்தபோதிலும் தீயை அணைக்க முடியாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குப் புறம்பாக தமிழகத்தில் உள்ள அணு உலைகளைப் பதுகாக்க நடமாடும் ராடர்களை இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் என்றும் விமானப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். (அ-1)

# மாவட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிக எண்ணிக்கை கொண்ட அமைச்சரவை என்ற எதிர்க்கட்சிகளின் குறிப்பாக ஜே.வி.பியின் கண்டனங்களை இல்லாமற் செய்வதற்கு மாவட்ட அமைச்சர்கள் திட்டம் பெரிதும் உதவும் என்று அரச உயர் வட்டாரங்கள் கருதுகின்றன.

அதனால் அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவிகளை வகிப்பவர்களில் தமக்கு வேண்டியவர்களை மாவட்ட அமைச்சர்களாக நியமிப்பதும் ஜனாதிபதியின் உத்தேச திட்டத்தில் ஒன்றெனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்போதுள்ள அமைச்சரவையில் 108 பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ளவர்கள். ஏனையோர் அந்தஸ்து இல்லாத அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் ஆவர். (அ)

# புலிகளின் கட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இருந்து வவுனியா வைத்திய சாலைக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்லும் அம்புலன்ஸ்கள் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் படையினரால் நிறுத்தப்படுகின்றன.

பின்னர் அங்கிருந்து நோயாளர்கள் பஸ்களிலும் மற்றும் படையினரின் வாகனங்களிலும் ஏற்றி வவுனியா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

இதனால் நோயாளர்கள் பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றனர். எனவே, இவற்றைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அவர் இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை அவர் கிளிநொச்சி அரச அதிபர், வவுனியா அரச அதிபர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, மற்றும் ஓமந்தைப் படை அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் விடுத்துள்ளார். (சி)


யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர் குழுவினால்
ஆரம்பம் ஜனவரி 5
A/L 2010
ஆரம்பம் ஜனவரி 5
கலை, வர்த்தகப் பிரிவு ஆரம்பம் ஜனவரி 5 சனி காலை 8.30மணி
கணித, உயிரியல் பிரிவு ஆரம்பம் ஜனவரி 5 சனி மாலை 3.00மணி
நாவலர் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

ஆள்தேவை
ஸ்ருடியோவில் வேலை செய்ய போட்டோசொப் டிசைனிங் தெரிந்த பெண் பிள்ளை தேவை
சரவணாஸ் ஸ்ருடியோ
சித்தங்கேணி
தொ.பே 0602214682


# மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட 9 சபைகளுக்கான தேர்தலை தொடர்ச்சியாக நடத்தவே அரசு இப்போது திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மட்டு. மாநகரசபை மற்றும் வாழைச்சேனை, வாகரை, செங்கலடி, ஆரையம்பதி, பட்டிருப்பு, வவுணதீவு, கோரளைப்பற்று, எருவில் பிரதேச சபைகளுக்கான தேர்தல்களே இடம்பெறவுள்ளன.

அரசுடன் சோந்தியங்கும் ஆயுதக் குழுக்களின் அட்டகாசம், அரச படைகளின் துணையுடன் கிழக்கில் கட்டுமீறுகின்றன என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் அங்கு தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது.

''புலிகளுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எதிரான பேரணியொன்றை அண்மையில் மட்டு. நகரில் நடத்திய கருணா குழுவினர், ஆயுத முனைகளிலேயே அப்பாவிப் பொதுமக்களைப் பேரணிக்கு கூட்டி வந்தனர். தமது பிள்ளைகள் கடத்தப்படுவர் அல்லது கொலை செய்யப்படுவர் என்ற அச்சம் காரணமாகவே மக்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர். அதுபோலவே தேர்தல் நடத்தப்பட்டால் மக்கள் அச்சத்தால் ஒட்டுக்குழுக்களுக்கு வாக்களிக்கும் நிலைமை ஏற்படும்'' - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் (ரி.எம்.வி.பி.) எனத் தமது குழுவை அரசியல் கட்சியாகப் பதிவு செய்திருக்கும் கருணா அணியினர் இந்தத் தேர்தலில் முதற்தடவையாக களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பில் செயற்படும் ஆயுதக்குழுக்களால் தேர்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது என்றும் நீதியான, நியாயமான தேர்தலை நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார். (அ-1-சி)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் சிவலிங்கம்

(ஓப்பந்தகாரர்)

கைதடி மத்தி, கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் சிவலிங்கம் நேற்று(24.12.2007) திங்கட்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
கைதடிமத்தி, கைதடி. ச.ரவிந்திரன் (மைத்துனர்)

## செல்வி தேவகி தனபாலன்



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தேவகி தனபாலன் நேற்று(24.12.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா தனபாலன் மற்றும் நகுலேஸ்வரியின் அன்பு மகளும் சியாமளாதேவி, மஞ்சுளாதேவி(பிரதேச செயலாளர், உடுவில்), பிரியலஷ்மி (ஆசிரியை, யாழ்.மத்திய கல்லூரி), திருக்குமரன் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கு.சதானந்தனின் (NEHRP T.O) அன்பு மைத்துனியும் சசிகாந், பங்கஜன் ஆகியோரின் அன்பு சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

## கந்தப்பிள்ளை செல்லையா

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை செல்லையா நேற்று (24.12.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் பாக்கியம் ஆகியோரின் சகோதரரும் திருச்செல்வம், காலஞ்சென்ற திருவேந்தன் மற்றும் திருமகள்(சுவிஸ்), திருவிளங்கம்(ஆசிரியர், மயிலணி மகாவித்தியாலயம், சுன்னாகம்), திருமாவளவன்(கண்ணன்), திருக்குமரன் (சாந்திகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலன் (சுவிஸ்), சந்திராதேவி, ராணி, நந்தகௌரி(கனடா), கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் இனியா(சுவிஸ்), சுவர்ணா (சுவிஸ்), கோபினி, தாரணி, திருவரசன், பிரியா, சஞ்சீவன், சந்தோஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.12.2007) செவ்வாய்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். திருக்குமரன் (மகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org